147

Regd. M. 1803. Vol. I. No. 4.

4 - JAN 1924

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்

தே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்க மானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளி சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே. கருப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகல.

ரூ. 4½, 5.

கம்பளி ஆஸனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½, உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடிதாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக் கொள்ள உபயோகமுள்ளது.

5	முழம்	24	இஞ்சு	அக.	ரூ.	2
6	,,	24	,,		,,	2½
7	,,	29	,,		,,	3
8	,,	40	,,		,,	5½
10	முழம்	40	இஞ்ச	அக.	ரூ.	7
16	,,	40	,,		,,	12
18	,,	40	,,		,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,
சில்க் ஹவுஸ்,
காசி.



காசி தசாஸ்வமேத கட்டத்தில், கிரணத்திருநாள் ஸ்நானம்.

ஓம்

லக்ஷ்மி துதி

பொன்னும், மணியும், புவியாள்
செங்கோலும், மென் பூந்துகிலும்,
மின்னும் மகுட முதலாய பூணும்,
விய னழகும்,
மன்னும் வல்வீரமும் வாகையு
மாதிய வாழ் வனைத்தும்
நன்னுதற் செந்திரு மங்கைதன்
நாட்டங்கள் நல்குபவே.

பெண்கள் பந்தடித்தல்.

முற்காலத்துத் தமிழ்ப் பெண்கள் பாண்டியனை வாழ்த்திப் பந்தடித்தலை ஆசிரியர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் 'கந்துக வரி' என்னும் தலைப்பில் வர்ணித்திருக்கிறார். பந்தடிக்கும் காட்சியை இந்தப் பாடல்கள் எவ்வளவு அழகாகவும் பொருத்த மாகவும் வர்ணிக்கின்றன வென்பதைப் படிப்பவர்கள் கண்டு இன்புறலாம்.

பொன் இலங்கு பூங்கொடி
　　பொலம் செய் கோதை வில்லிட
மின் இலங்கு மேகலைகள்
　　ஆர்ப்ப, ஆர்ப்ப எங்கணும்
"தென்னன் வாழ்க! வாழ்க!" என்று
　　சென்று பந் தடித்துமே;
"தேவர் ஆர மார்பன் வாழ்க"
　　என்று பந் தடித்துமே. 1

பின்னு முன்னும் எங்கணும்
　　பெயர்ந்து வந் தெழுந்துலாய்
மின்னுமின் இளங்கொடி
　　வியன் நிலத் திழிந்தென
"தென்னன் வாழ்க! வாழ்க;" என்று
　　சென்று பந் தடித்துமே;
"தேவ ரார மார்பன் வாழ்க!"
　　என்றுபந் தடித்துமே. 2

துன்னிவந்து கைத்தலத்
　　திருந்த தில்லை, நீணிலம்
தன்னி னின்றும் அந்தரத்
　　தெழுந்த தில்லை தான் என
"தென்னன் வாழ்க, வாழ்க!" என்று
　　சென்று பந் தடித்துமே;
தேவ ரார மார்பன் வாழ்க!
　　என்றுபந் தடித்துமே. 3

தமிழர் வாழ்வு.

பூலோகத்திலே வேறு எந்த நாட்டில் பிறந்தவனையும் விடத் தமிழ் நாட்டில் பிறந்தவன் பெருமை யடையக் கூடிய விஷயங்கள் பல. தமிழனாகப் பிறந்தவனைப் பூமி தேவிக்குத் தலைப்பிள்ளை யென்று சொல்லவேண்டும். பூமி நூல் முறையில் நோக்கினால் பூலோகத்திலே மிகவும் பழைமையான நாடு தமிழ் நாடே. பூலோகத்தில் இப்பொழுது பெரு நாடுகளாக விளங்கும் பல சிறுநாடுகள் வருணனது பெருவயிற்றுக்குள் கிடந்தபொழுது தமிழ்நாடு தலைசிறந்து விளங்கியது. பூலோகத்தில் இப்பொழுது வல்லரசுகளாக விளங்கும் பல சிற்றரசுகள் காலத்தின் கருப்பத்தில் கூடத் தோன்றாத அந்தக் காலத்திலே தமிழரசி தரணியிலே தனியரசு செலுத்தி நின்றாள். பழைமையிலும் இனிமையிலும் செம்மையிலும் தமிழ் மொழி தலை சிறந்து விளங்குகிறது. தமிழ் நாகரிகமும் அத் தன்மைத்தே. இப்பொழுது இந்து மகா சமுத்திரம் என்ற பெயருடன் விளங்கும் பெருநீர்ப் பகுதி முழுமையும் ஒரு காலத்தில் குமரி நாடென்ற பெயருடன் மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும் தெற்கே ஆஸ்ட்ரேலியா வரையிலும் பரவித் தமிழ்நாடாக விளங்கிய தென்றால் தமிழகத்தின் விரிவைக் கூறவேண்டுமா? தமிழகம் கிழக்கே ஜாவா சுமத்ரா வரை பரவி யிருந்தது. சுமத்ராவில் இப்பொழுதும் மதுரை யென்ற பெயருடன் விளங்கும் ஊரே தலைச்சங்கம் விளங்கிய தமிழ் மதுரை யென்று கூறுவாரும் உளர். அது எவ்வா றிருப்பினும், அங்கு தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் நிலவி யிருந்தன வென்பதற்கு மேற் கண்ட மதுரையும், ஜாவா, சுமத்ராத் தீவுகளில் இப் பொழுதும் காணப்படும் திருக்கோவில்களும் வேறு பல சின்னங்களும் இன்றும் சான்றாக விளங்குகின்றன. பர்மாவையும், அந்தமான், நக்கவார்த் தீவுகளையும் தமிழரசர்கள் வென்று ஆட்சிபுரிந் திருக்கிறார்கள். குமரித் தமிழ் இமயம் வரை பரவியிருந்தது. அதற்கு இன்றும் சான்றுகளைக் காண

லாம். தமிழ் நாகரிகமோ இப்பொழுது மெசபொத்தாமியா வென்று வழங்கும் தொலை நாடு வரை ஒரு காலத்தில் பரவி யிருந்ததென்று தெரிகிறது. தமிழர் வியாபாரம் ஒரு காலத்தில் ரோமாபுரி வரை சென்றது.

பூலோகத்திலே முதன் முதல் தோன்றிய நாடு தமிழக மென்ற அறிஞர் கூற்றுக்கு ஏற்பத் தமிழர் சமயமும் தலை சிறந்து விளங்குகிறது. இன்று தமிழ் நாட்டிலே சமய மென்பது வெறும் வேஷத்தில் வந் திழிந்து நிற்பினும், ஞானத்திலே, பரமோனத்திலே தலை சிறந்து விளங்கிய சமயாச்சாரியர்களைக் கொண்ட நாடு நமது தாய்த் தமிழ் நாடே யாகும். சிவபெருமானது திருவிளையாடல்களுக் குரியதாய் விளங்குவது தமிழ்நா டென்பதை நாம் சொல்ல வேண்டுமோ ? ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும், சித்தர் களுக்கும் உவந்த நிலையமாய் விளங்குவது தமிழ் நாடாகும். தமிழ்த் தெய்வத்தின் பெருமையையும், தமிழ்ச் சமயத் தின் பெருமையையும், தமிழ் நாகரிகத்தின் பெருமையை யும், தமிழ் நாட்டிலே, பூலோகத்திற் கெல்லாம் அதிசய மாக விளங்கும் திருக்கோயில்களே உலகம் உள்ளவரை விளக்கும். தமிழ் மொழியைத் தெய்வத் தேன்மொழி யென்பார் அறிஞர். திருவள்ளுவர் செய்த திருக்குறளை விடச் சிறந்த தோர் நீதிநூல் பூலோகத்திலே வேறு உண்டா ? தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய பெருவாய் மொழிகளின் பெருமையை விளக்கவேண்டுமா ? கம்ப ராமாயணத்தின் பெருமையை விளக்கக் கவிராயர்களே வேண்டும். கலைச் செல்வத்திலேயும் தமிழ்த் தாய் நிறைவு பெற்றே விளங்குகின்றாள். அரசர்களை, வீரர்களைக், குரவர் களை, வள்ளல்களைப், புலவர்களை நோக்கினால் பொற்கைப் பாண்டியனையும், மநுநீதிச் சோழனையும் விடச் சிறந்த நீதி மன்னர் ஜெகத்திலே வேறு உண்டா ? கரிகாலனையும் சேரன் செங்குட்டுவனையும் விட வீரத்தில் சிறந்த மன்ன வர்களைத் தேடியே பிடிக்கவேண்டும். பாரி, குமண னாதிய ரின் கொடைப் பெருமையைக் குவலயம் இன்று மறந் திருப்பினும், அவை தமிழ் இலக்கியத்திலே தமிழ் நாடு உள்ளவரை விளங்கித் திகழும். கம்பனும், இளங்கோவும், சாத்தனாரும், ஔவையும் போன்ற தெய்வகண்ட புலவர் களைப் பெற்றது தமிழ் நாடு.

அனைத்திற்கும் மேலாகத் தமிழகத்திற்குப் பெருமை யளிக்கும் சமயத்திற் குரிய தலைவர்களை நோக்கினால், அவர்கள் தெய்வாம்சம் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். பாலரு வாயனான ஞானசம்பந்தனையும், பாட்டரு வாயரான அப்பரையும், தம்பிரான் தோழனான எம்பிரான் சுந்தரனையும், திருவாசகம் அருளிய மணிவாசகரையும், சிந்திக்கும் உண்மைத் தமிழன் எவன் தான் உள்ள முருகி உவகை பூக்காம லிருக்க முடியும்? இனிக், கரும்பையும் அமுதையும் கைக்கச் செய்யும் திருவாய்மொழி பாடிய பெரிய ஆழ்வார்களின் பெருமையை எவ்வாறு பேசுவது? திருப்பாவை பாடிய அருட் பாவையான ஆண்டாளின் அருமையை என்னென்பது? தமிழ் நாடு எங்கும் சிவ மயம், எங்கும் விஷ்ணு மயம், எங்கும் தெய்வ மயம், எங்கும் கோயில் மயம், எங்கும் பக்தி மயம், எங்கும் பாட்டு மயம், எங்கும் கான மயம், எங்கும் தான மயம்.

ஞானத்திலே, யோகத்திலே, பக்தியிலே, அன்பிலே, அருளிலே, செல்வத்திலே, கல்வியிலே, தலைமையிலே, புலமையிலே, பூலோகத்தில் சிறந்த நாட்டை நோக்க வேண்டுமென்றால் முன் வடக்கே இமயமுதல், தெற்கே குமரிக்குத் தெற்கே பல்காத தூரம் வரை பரந்து நிலவி, இன்று வடவேங்கடம் தென்குமரி ஆயிடைச் சுருங்கி விளங்கும் தெய்வத் தமிழ் நாட்டையே குறிப்பிட வேண்டும். மலை வளத்திலே, கடல் வளத்திலே, நில வளத்திலே, நீர் வளத்திலே சிறந்து விளங்கும் நாடு தமிழ் நாடே|யாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பொருந்திய தட்ப வெப்ப நிலையும், ஏனைய வளங்களும் சிறந்து விளங்குவது தமிழ் நாடே. பூ மண்டலத்திலே பாரத தேசம் சிறந்தது. பாரத தேசத்திலே தமிழ் நாடு தலை சிறந்தது. இதற்கு ஓ ராயிரம் காரணம் காட்டி விளக்கலாம்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

என்று பாடிச் சென்ற பெருங் கவி வெறும்பாட்டைப் பாடிச் செல்ல வில்லை. உண்மையையே பாடினார்.

ஆயினும் தமிழ் நாட்டின் தற்கால நிலை என்ன? தமிழ் நாடு அடிமைச் சேற்றிலே, அறியாமைக் குழியிலே, வறு

ண்மைப் புதரிலே, சிறுமைத்தேரியிலே விழுந்துகிடக்கிறது. பழைமை அறிந்து, தங்கள் பெருமை உணர்ந்த பெருந் தமிழர்களைக் காணோம். மக்களாய்ப் பிறந்த பெருமையை அறிந்து பெருஞ் செயல்களை நாடும் பெருந் தமிழர்கள் இல்லை. மனிதன்—அதிலும் தமிழன் தெய்வாசம் பெற்ற வன்என்பதைத் தமிழன் அறவே மறந்துவிட்டான். தமிழ னிடம் பெருஞ் சிந்தனைகளைக் காணோம். பெரு நினை வில்லை. பெருஞ் செயல் இல்லை. சிறு வயிற்றுக் கிரை தேடிச் சில நாள் வாழ்ந்து செத் தொழிவதே அவன் கதி யாய்விட்டது. மனித வாழ்க்கையின் மாட்சியை அவன் மறந்து விட்டான். மனித வாழ்க்கை இன்பம் என்பதை அவன் மறந்து விட்டான். அன்பை மறந்து விட்டான். அறிவைத் துறந்து விட்டான். சமய உணர்ச்சி யுள்ளவ னென்று கருதப்படும் தமிழன் உலகம் பொய், இவ்வுலகம் துக்கம், துன்பம், துயரம் என்று தான் நம்பாத பொய் வேதாந்தத்தைப் பரப்பி வருகின்றான். சிவ மயமாய், விஷ்ணு மயமாய், சத்தி மயமாய், கடவுள் மயமாய் விளங்கும் உலகம், துன்ப மய மாதல், துக்க மய மாதல் யாங்ஙனம் என்பதைச் சிந்திக்கும் தமிழனைக் காணோம். தமிழ் நாட்டில் சமயச் சண்டை மிகுதி. ஜாதிச்சண்டை அனந்தம். வீபூதிக்கும் திருமண்ணுக்கும் சண்டை. திரு மண்ணுக்குள்ளேயே கலைச் சண்டை. அதில் துளசிச் சண்டை. தீர்த்தச் சண்டை. புளியஞ்சோற்றுச் சண்டை. உண்மைச் சமயத்தைப் போதிக்கத் தோன்றிய மடாலயங் கள் சோற்று மடங்களாய், கொலைக் களங்களாய் மாறி விட்டன. கோயில்கள் கற்கோயில்களாய் மட்டும் விளங்கு கின்றன. அவற்றின் உண்மைகளையும், அழகையும் பெருமையையும் கண்டு களிப்பதற்குரிய கண்ணும் கருத் தும் தற்காலத் தமிழனுக்கு இல்லை. தமிழ்க் கோயில்களின் அழகைத் 'துரைமார்கள்' கண்டு மகிழ்கின்றார்கள். நமது தெய்வங்கள் (சிலைகள்) பல லண்டனிலும், பெர்லினிலும், நியூயார்க்கிலும் உள்ள கண்காட்சிச் சாலைகளில் எழுப்புவா ரின்றி உறங்குகின்றன. மதுரை வண்டேர்ணித் தெப் பக்குளத்தின் அழகை வெள்ளைக்காரர்கள் விதவிதமாகப் படம் பிடித்து அழகு பார்க்கிறார்கள். ஆனால் தமிழனுக்கு அதன் அழகு தெரியவில்லை; அதிலுள்ள சேற்றையே

அவன் காண்கின்றான். தஞ்சாவூர்க் கோபுரம் அவனுக்கு வியப்பாகத் தோன்ற வில்லை. தெய்வச் சிலைகளிலே, சித்திரங்களிலே அவன் சித்தம் மகிழவில்லை. செந்தாமரையை நோக்கி அவன் சிந்தை மகிழவில்லை. வெண்டாமரையைக் கண்டு அவன் உள்ளம் மென்மை அடையவில்லை. நீலத் தாமரையைக் கண்டு அவன் நெஞ்சம் இளகவில்லை. மலர்களைக் கண்டு அவன் மனம் மகிழவில்லை. வானத்தின் நீலத்தை, மதியின் தெளிவை, கடலின் மகிமையை அவன் கண்டு மகிழவில்லை. திருப்பதி எழு மலையும், திருக்காளத்தி மலையும், திருப்பழனி மலையும் அவனுக்கு வியப்பாகத் தோன்றவில்லை. குற்றாலத்து அருவியும், பாபநாசத்து அமைதியும், மலையமலையின் தென்றலும், குமரியின் தவமும் அவன் நோய்களைக் கவலைகளைப் போக்கவில்லை.

*   *   *   *

நாடாண்ட மறவன் இன்று கோளிச் சண்டையிலும் குருவிப் போரிலும், கீரைக் களவிலும் நாட் கழிக்கின்றான். அவன் வாள் வலியும் வேல் வலியும் போய்விட்டன. இன்று மண் வெட்டிக் கூலி தின்கின்றான். நவகோடி நாராயணன் செட்டியார்கள் வாழ்ந்த இந்த நாட்டில் கீரைக்கடைக்கு எதிர்க்கடை போடும் வைசியர்கள் மிகுதி. நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களையும், ஏனைய விளை பொருள்களையும் தங்கள் சொந்த லாபத்தை மட்டும் கருதி வெளி நாடுகளுக்கு ஏற்றி அனுப்பிவிட்டு, நாட்டாரை வறுமையில் ஆழ்த்தும் பெரிய வியாபாரிகளும் உளர். வியாபார தர்மத்தை மறந்து விட்ட வியாபாரிகள் நாட்டில் மிகுதி. நாட்டிலே விளையும் கொட்டை முத்தையும், நிலக்கடலையையும், தேங்காயையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு, நாட்டு ஜனங்கள் விளக் கெரிப்பதற்கு நல்லெண்ணெய்கள் இல்லாமற் செய்து, மண்ணெண்ணெயை வருத்தி ஏழை ஜனங்களின் கண்ணையும் கருத்தையும் கெடுக்கும் வியாபாரிகள் மிகுதியாயிருந்தால், இந்த நாட்டு வியாபாரம் எவ்வளவு குருட்டுத்தனமாய் நடைபெறுகிற தென்பதைச் சொல்லவும் வேண்டுமா !

இனி எல்லோரும் தொழுங் குலமாக வேண்டிய உழுங் குலத்தைக் கவனிப்போம். சிறிய முயற்சியில் பெரும்பயன்

அடையக் கூடிய அறிய விவசாய முறைகளைத் தற்காலத் தமிழ் விவசாயி மறந்து விட்டான். சீதேவி கழனியிலே வாழ்கிறுள் என்பதை அவன் மறந்து விட்டான். 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்ற பெருமொழியைத் தமிழ் நாடு மறந்து விட்டது. கோ மாதாவை நாம் மறந்து விட்டோம். நமக்கு வேண்டிய பால் டென்மார்க்கி லிருந்து வருகிறது. ஊறுகாய் முதலிய உணவுப் பொருள்கள் கூடச் சீமையிலிருந்து வருகின்றன. வந்தவா சிக் கத்தி செய்த ஆச்சாரி எந்த மூலையில் இருக்கிருரோ தெரியவில்லை. ஆனுல் 'இச்சன்ன' (ச்) விட்டுப் போய்விட்டதென்று சட்ட சபை வரை போராடும் விஸ்வ கர்மர்கள் மிகுதி. விவசாயத்திலும் நெசவிலும் வேறு தொழில்களிலும் ஈடுபட் டிருந்த ஜனங்களில் பலர் தங்கள் சுகவாச ஸ்தலங்களைவிட்டு இன்று நகரங்களுக்கு வந்து நகரங்களை நரகங்க ளாக்கி, யந்திர சாலைகளிலும், வேறு பல தொழிற்சாலைகளிலும் அடிமைக் கூலிகளாக வேலை செய்து அளப்பருந் துன்பங்களை அநுபவித்து வருகி ருர்கள். பலர் அந்நிய நாடுகள் சென்று அவதிப்பட்டு வருகிருர்கள். பல வளமும் மிகுந்த தமிழ் நாட்டின் பெரும் பகுதி இன்று அரை வயிறும் குறை வயிறும் உண்டு குற்றுயிர் வாழ்ந்து வருகின்றது.

இதுதான தமிழர் வாழ்வு? தமிழர் புது வாழ்வு-பெருவாழ்வு வாழ வேண்டும். அவர்கள் வறுமைகள் சிறுமைகள் நீங்கிப் பெருமைகள் ஏற்படவேண்டும். துன்பங்களும் துயரங்களும் நீங்கி இன்பமும் ஏற்றமும் ஏற்படவேண்டும். அவர்கள் கஷ்டங்கள் நீங்கிச் சுகம் ஏற்படவேண்டும். தற்காலத் தமிழனுக்கு உலகம் துன்ப மயமாக, வாழ்க்கை துயர மயமாக இருப்பது நீங்கி, உலகம் இன்பமாக, வாழ்க்கை சுக மயமாக மாறவேண்டும். தமிழன் அந்நியனுக்கு அடிமையா யிருப்பதை விட, அறியாமைக்குப் பெரிதும் அடிமையா யிருக்கிருன். அவன் அறி யாமை நீங்கி அறிவிலே வளர வேண்டும். எத்தனையோ அறியாமையும், அசத்தியங்களும், அநி யாயங்களும், அதர்மங்களும் அவனுக்கு வாழ்க்கையிலே விலங்கிட் டிருக்கின்றன. அந்தத் தளைகளை யெல்லாம் அவன் ஞான வாளால் வெட்டி யெறியவேண்டும். தமிழன்

தனது பழைமையைச் சிந்திக்க வேண்டும். தற்காலச் சிறுமையை உணரவேண்டும். இரண்டையும் உணர்ந்தால், அவன் இனி அடையப்போகிற புதுமை மிகப் பெருமை யுடைய தென்பது திண்ணம். உலகம் முழுமையும் இன்று கலி ஒழிந்து கொண்டிருக்கிறது. உலகத்தார் அனை வரும் புதுவாழ்வை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். தமிழனும், தனது பெருமையை உணர்ந்தால், கலியை ஒழித்து மிகச் சிறந்ததோர் புது வாழ்வையும் பெரு வாழ் வையும் அடைதல் கூடும். அவன் உலகத்திற்கே தலைமை வகித்தல் கூடும். அவன் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக நிலவும். அப்பொழுது நாம் அனைவரும்

இன்பம் உலகமென்று பாடுவோம்.

நல்லொழுக்கமும் மெய்யறிவும்

ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக ஸ்வாமிகள் எழுதியது.

உலகத்தில் அநேகர் மெய்யறிவொன்றிற்கே புலப் படத்தக்க பல அருமையான விஷயங்களைப் பேசவும், அயலார்க்கெடுத் துபதேசிக்கவும் கேட்கிறோம். ஆயினும் அவரிற் பலர் தாமே பிறருக் குபதேசித்த மொழிகளுக்கு மாறாக ஒழுகலையும் காண்கிறோம். இங்ஙன மிருத்தலின், பெரும்பாலர் நல்லொழுக்கத்திற்கும், மெய்யறிவிற்கும் யாதொரு ஸம்பந்தமும் இல்லை யென்றும், ஒழுக்கம் மாறாக விருப்பினும் மெய்யறிவுடைத்தாயிருத்தல் கூடுமென்றும் நினைக்கின்றனர். இதன் உண்மையைப் பற்றிச் சிறிது விசாரிப்பாம்.

நல்லொழுக்க மாவது யாது? நல்லொழுக்கம் இன்ன தென்பது பிறர் போதிக்காமலே பலருடைய மனோ ஸாக்ஷிக்குப் புலப்படுவதாயினும், எழுதப் புகின், எவ் வளவு தூரம் வரையினும் முடிவுபெறாமல் விரியத்தக்க

தாயினும், இவ்விடத்தில் ஒருவாறு சுருக்கிக் கூறுவாம். ஒழுக்கமெனின், நடையெனப் பொருள்படும். ஆகவே, நல்லொழுக்க மெனின் நன்னடை; அதாவது தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கத்தக்க வழியில் நடத்தல். அவ்வழியின் அங்கங்கள் பல வுளவேனும், எவ்விதத்தாலும் மனோ வாக்குக் காயங்களால் மற்ற ஜீவர்களுக்கு யாதொரு உபத்திரவமும் உண்டுபண்ணு திருத்தல், சத்ருக்களாலும் தனக்கு நேரிடுந் துன்பத்தைப் பொறுத்தல், எல்லா உயிர்கள் மேலும் தன்னிடத்திற்போல இடையறு நேசம் வைத்தல், புத்ர மித்ர களத்ராதிகளிடத்தும், பகைவரிடத்தும், ஸமபாவனை வைத்தல் *ப்ரம்மச்சர்ய வ்ரத மனுஷ்டித்த லாதியனவே முக்கியமானவை யெனக் கூறலாம்.

மெய்யறிவென்பது யாது? மெய்யறிவெனின், உண்மை ஞானமெனப் பொருள் படும். அதன் அங்கங்களும் பல வுளவேனும், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப் பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதே முக்கியமான தெனக் கூறலாம். அதாவது எந்தப் பொருளிடத்தும் உண்மைப் பொருளை அறிவதே அறிவென்பதாம்.

இவ்வுலகின் கண் நாம் காணும் பொருள்கள் யாவும் இரு பகுப்பினுள் அடங்கியவையா யிருக்கின்றன. அவ்விரு பகுப்பாவன:—சரம், அசரம் என்பனவேயாம். இவ்விருவகைப் பொருள்களிலும் மனிதர் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வாம். நமக்கு விஷயமாகும் ஒவ்வொரு பொருளிலும் நம்முடைய கற்பனையும் கலந்தே யிருக்கின்றது. இவ்வுண்மையை உணராமல் பொருள்கள் தோன்றும் வண்ணமே ஸாதாரண மாந்தர் க்ரகித்தலின் மயக்கத்திற் கிட மாகின்றது. அங்ஙனம் க்ரகித்தலையே அஞ்ஞானமெனச் சுருதிகள் கூறுகின்றன.

*விவாகமின்றி யிருத்தல்; அல்லது தன் மனைவியைத் தவிர அயல் மாதரை யெல்லாம் மனோ வாக்குக் காயங்களால் விலக்கி யிருத்தல்.

அஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் எனப்படு மிரண்டும் அறிவே யாயினும் முந்தினதால் துன்பமும் பிந்தினதால் இன்பமும் ஜனிக்கின்றன. கானல் நீரை ஜலமாகவே கொள்ளும் ம்ருகங்கள் அதனை யருந்தலாமெனக் கருதி, ஓடியுழன்று, துக்கத்திற்குள் ளாகின்றன. ஆனல், அதனை யுள்ளவாறு க்ரகித்த மனிதனுக்கு அவ்வித துக்கம் ஸம்பவிக்கிறதில்லை. இது நிற்க. மெய்ஞ்ஞான மென்பது இன்னதெனத் திருஷ்டாந்த வாயிலாக நன்குணர்த்துவாம். ஒரு மனிதன் பனிக்கட்டியைப் பார்த்து வெள்ளைக் கல்லென்று சொல்லுகிருனெனவும் மற்றொருவன் ஜலமெனச் சொல்லுகிருனெனவும் வைத்துக் கொள்வோம். இதில் பிந்தியவனுடையது உண்மை யறிவன்றோ? நல்லது, வேறொருவன் அதனை அணுக் கூட்டமெனச் சொல்லுவானயின், அவனுடையது மற்றவ னுடையதிலும் உண்மையன்றோ? இதனை நோக்கி, முந்தியவனுடையது அஞ்ஞானமெனக் கூறப்படுகின்றது. கார்யத்தின் தோற்றம் எவ்விதமா யிருப்பினும் அது காரணத்தைத் தவிர இன்றுதலின் காரியப் பொருளின் அறிவை நோக்கி, காரணப் பொருளின் அறிவு மேலான தெனவும், உண்மையானதெனவும் கொள்ளப் படுகின்றது. நமக்குப் புலப்படும் பொருள்கள் யாவும் கார்யப் பொருள்க ளாதலானும், அவற்றிற்கு அடுத்த முந்தின காரணப் பொருள்களாயிருப்பனவும் எதார்த்தத்தில் கார்யப் பொருள்களாகவே யிருத்தலானும், இவ்வாறே செல்லச் செல்ல யாவும் கார்யப் பொருள்களே யாகின்றமையானும், சராசரங்களாகத் தோன்றும் யாவற்றிற்கும் மூலகாரணமான பொருளை யுணரும் உணர்வே மெய்ஞ்ஞானமெனக் கொள்ளற் பாலதென்பர் அறிவுடையார். மெய்யறி வென்பதற்கு இஃதே உரித்தான பொருளென்பது

> "ஐயறி வறிந்தவை யடங்கினர்க ளேனும்
> மெய்யறிவி லாதவர்கள் வீடது பெருரே"

எனச் சசிவர்ண போதத்திற் கூறியிருத்தலானும் நன்கு விளங்குகின்றமை காண்க.

இனி, இத்தகைய மெய்யறிவு நல்லொழுக்க மின்றி யுண்டாகுமா வென ஆலோசிப்பாம். வான சாஸ்திரி

யொருவன் விண்மீன்களின் நிலையை நிதானிக்கப் புகுவா னயின், அவனுடைய கருவி ஸ்திரமாகவும் அதிலுள்ள கண்ணாடிகள் சுத்தமாகவும் இருக்கவேண்டுவ தாவசியக மன்றோ? அதுபோலவே, இந்த்ரியங்களால் அறியப் படாததாயும், ஸூக்ஷ்மங்களுக் கெல்லாம் ஸூக்ஷ்மமான தாயும், ஸர்வ வியாபகமாயும், யாவற்றிற்கும் காரணமாயும் இருக்கப்பட்ட உண்மைப் பொருளை யறியவேண்டு மாயின் மனமானது ஸஞ்சல மற்றதாயும், பரிசுத்தமானதாகவும் இருக்கவேண்டுவ தாவச்யக மாகின்றது. ஸாதாரண மனி தர்களுடைய மனமானது மலம் பொருந்தினதாயும், ஸதா ஸஞ்சரிப்பதாகவுமே யிருக்கின்றது. மனதின் சலனம் யாவர்க்கும் ப்ரத்தியக்ஷமே. அதற்காகப் பலர் துக்கித்துக் கூட இருப்பார்கள்.

மனதில் அழுக்குள்ளதென எங்ஙன மறியலா மெனின், ஒழுக்கத்தின் மலினத் தன்மையை வைத்தறியலா மென்க. தீயவொழுக்கம் இன்ன தென்பது யாவர்க்கும் அறியற் பாலதாகலானும், முன்னர் நல்லொழுக்கம் இனையதெனக் கூறியிருத்தலால் அதற்கு மாறுயது மற்றதென எளிதில் உணரக்கூடிய தாதலானும் ஈண்டு ப்ரத்தியேகமாய் அதனை விரிக்கப் புகுந்தா மில்லை.

இனி, மனதின் ஸஞ்சலமும் அசுத்தமும் நல் லொழுக்கத்தால் நீங்குமேயன்றி அஃதில்லாவிடின் நீங்கா வெனக் கூறுதும். மனதின் ஸாஞ்சல்யம் ராகத்வேஷங் களாலும், அவைகள் ஸ்வய நயம் பாராட்டும் தன்மை யாலும் உண்டாகின்றன. மனதின் அசுத்தத்திற்கு ஹேது வாகிய ஸகல துர்க்குணங்களும் ராகத்வேஷங்களினின்றே யுண்டாகின்றன. ஆகவே, ஸ்வய நயம் பாராட்டுதல் எம்மட்டும் தடித்திருக்கின்றதோ அம்மட்டும் மனதின் சலனமும் அசுத்தமும் நீங்காவென்பதும், அவை நீங்காமை யால் மெய்ஞ்ஞானோதயத்திற்கு ஹேதுவில்லை யென்பதும் வெளியாகின்றன. நியாயாதிபதி யொருவன் ஓர் விஷ யத்தி னுண்மையைக் கண்டுபிடிக்க விரும்புவானயின் எங்ங னம் அவன் முன்பாக வரும் கக்ஷிக்காரர்கள்மேல் விருப்பு, வெறுப்பின்றி யிருந்து, சாக்ஷ்யங்களை நிதானிக்கவேண்டுவ தாவச்யகமோ, அங்ஙனமே எந்தப்பொருளின் உண்மையை

யும் அறியவேண்டுமாயின் அதனிடத்தில் ராகத்வேஷ மின்றி ஆராய்ந்துணர்தல் ஆவச்யகம். ஸ்வய நயமுளதேல் ராகத்வேஷம் ஏற்படும். ஏற்படின், மெய்யுணர் வுண்டாகாது. ஆனல், ஸ்வய நயத்தை விட்டு யாவரையும் தன்னைப் போலவே நேசிக்கின், மனம் சாந்த மடைதலோடு பரிசுத்தமு மடையும். எங்ஙன மெனின், பிதா ஒருவன் தனது அருமைப் புத்ரன் அநுபவிக்கும் விஷயங்களனைத்தையும் தான் அநுபவிக்காமலே, அநுபவித்ததுபோன்ற ஸந்தோஷத்தை யடைதல் அப்புத்ரன் விஷயத்தில் தன்னுடைய ஸ்வய நயத்தைத் துறந்திருத்தலினு னன்றோ? அதுபோலவே, ஸகல ஜீவர்களையும் ஒருவன் நேசிப்பானயின் அவனுக்கு ராகத்வேஷாதிகள் உண்டாதற் கிடமில்லை. எங்ஙனம் ஸ்வயநயம் பாராட்டுதல் துர்க்குணங்களுக் கிருப்பிடமாயும் அவற்றின் மூலமாகக் கெட்ட ஒழுக்கத்திற் கேதுவாகவும் இருக்கின்றதோ, அங்ஙனமே ஸ்வயநயந் துறத்தல் (யாவரிடத்தும் அன்பும், ஸமபாவனை முதலியன) நற்குணங்கள் யாவற்றிற்கும் இருப்பிடமாயும் அவற்றின் மூலமாக நல்லொழுக்கத்திற்கு ஹேதுவாயும் இருக்கின்றது. ஸ்வயநயந் துறத்தலுக்கும் நல்லொழுக்கத்தின் ஏனைய அங்கங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் மேற்கூறியவைகளைக் கொண்டு எளிதிலுணர்ந்து கொள்ளக் கூடியதாகலின் விளக்காது விடுத்தனம். இப்பொழுது, நல்லொழுக்க மின்றி மெய்யறிவு தோன்று தெனவும், ஆனல், அதனலேயே மற்றது தோன்று மெனவும் வெளியாகின்றதன்றோ? இது பற்றியே ஸ்ருதிகளும் நிஷ்காம்ய கர்மத்தினலேயே அந்தஃகரண சுத்தியும், அதனலேயே ஞானமும் உண்டாகுமெனப் ப்ரதிபாதிக்கின்றன.

"செய்த வினைப்பயன் விட்டிவை தீரா
தெய்த வியற்றி யிருப்பவ னேகா
ணுய்ய நினைத்திடு யோகிநன் ஞானி"

(இதன் பொருள் :—தான் செய்யா நிற்கும் கர்மங்களின் பயனை இச்சியாதொழித்து அக்கருமங்களை விடாமல் ச்ரத்தா பூர்வகமாகச் செய்து நிற்பவனே கண்டாய் கடைத்தேறக் கருதிய நல்ல யோகியும் ஞானியும்) என்று பகவத் கீதையில் கூறியிருத்தல் காண்க. இவ்வாறு ஒழுக்கத்தினலேயே மெய்ஞ்ஞானந் தோன்றுவதாயினும், அஃது

தோன்றிய பின்னரே ஒழுக்கமும் ஸ்திரதையையும் பூரணத்தையையும் அடைகின்றது. ஆதலால் மெய்ஞ்ஞானிகளிடத்திலேயே நல்லொழுக்கம் யாவும் குடியிருக்கின்றன. அதனாலேயே அவரைக் கண்டு படிப்பாராயினர் ஏனையோர்.

"நல்லவனேகே ளுலகுபகாரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபேறும் மிலை யதனாற் பிணியுமிலை"

(இதன் பொருள்:—ஸாதுவே! கேளாய்; ஞானிகள் செய்யும் வ்யவகாரம் உலகுக் குபகாரமாம். இதுவேயன்றி அவ் வ்யவகாரத்தால் அவர் அடையா நிற்கும் லாபம் வேறே யொன்றுமில்லை; துன்பமு மில்லை) என்று கைவல்யத்தில் கூறியிருக்கின்றது. இதனாலும் ஒழுக்கமொன்று கொண்டே ஞானிகளை யறியலாமென் றேற்படுகின்றதன்றோ?

ஆதலின் "யானை வரும் பின்னே, மணி யோசைவரு முன்னே" என்பதுபோல மெய்ஞ்ஞானோதயத்திற் கறிகுறியாக ஒழுக்கமே முந்துகின்றது. மெய்ஞ்ஞானம் முதிர்ச்சி யடையுங்கால் ஒழுக்கமும் முதிர்ச்சி யடைகின்றது. இக்கருத்துக் கொண்டே முற்காலத்தி லிருந்த (Socrates) சாக்ரட்டிஸ் என்னும் தத்வ ஞாநியார் அறிவே ஒழுக்க மென்றார். ஆனால், சில கல்விமான்கள் அவரை மறுத்தார்கள். தற்காலத்திலும் பலர் மறுக்கிறார்களன்றோ? அன்னோர் மறுத்தற்குக் காரணம் 'அறிவு' என்பது உலக விஷயங்களின் ஞானமெனக் கொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயின் அவர் கூறுவது சரியே. ஆனால், சாக்ரட்டிஸ் குறித்தது மெய்ஞ்ஞானத்தையெனத் தோன்றுகின்றது. அங்ஙனம் கொள்ளின் அவர் மொழிந்தது சரியென இதுவரை கூறிவந்த ந்யாயங்களால் புலப்படுமென்று நம்புகின்றோம்.

நல்லொழுக்க மில்லார் மெய்யறிவுடையா ரன்றேல், அவரிற் சிலர் ஞானமுடையோர் விளம்பத்தக்க பல விஷயங்களைப் பேசுகிறார்களே யெனின், அவர் பேசும் விஷயங்களி னுண்மை அவரால் காணப்பட்டதன்று. பின்னையோ, கண்ட பெரியோர் எழுதிவைத்த நூல்களி லுள்ளவைகளைப் படித்துத் தத்தைபோல் திரும்பச் சொல்வதேயாம்.

இங்ஙன மிருத்தலின், அத்தகையோரைக் கண்டு மயங்கா தொழிதலோடு ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்து முன்னர், ஞானத்திற் பழகலாமெனும் நம்பிக்கையை அடியோடே விட்டுவிட்டு, முதலில் ஸன்மார்க்கத்திற் பழக யாவரும் முயல்வாராக. உலக விஷய அறிவுங்கூட நல்லொழுக்கத் தோடு கூடின் ப்ரகாசிக்குமே யன்றி, ஒழுக்கம் தீயதா யிருப்பின், மற்றதும் அவ்வழியிலேயே புகுத்து மாதலின், யாவரும் ஒழுக்கத்தை ஓம்பக் கடவர். அதனாலேயே மெய்ஞ்ஞான மடையப்படும்.

> "பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
> தேரினு மஃதே துணை."

விட்ட குறை

ஓர் திவ்ய சரித்திரம்.

ஒரு குருவும் அவர் சிஷ்யனும் அநேக சிவஸ்தலங் களுக்குச் சென்று யாத்திரை செய்து கொண்டு வருகையில் வழியில் குருவுக்கு மிக அசாத்தியமான நோய் கண்டு விட்டது. இதனால் அவர் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கையில், ஓர் பறைச் சேரியண்டை இருவரும் வந்து தங்கும்படி நேர்ந்தது. அப்பொழுது குருவுக்கு அடங்காத கொடிய தாகம் அதிகரித்தது. உடனே தமது சிஷ்யனை அவசியம் தண்ணீர் கொண்டு வரும்படி ஏவினர். அவன் எங்கும் சுற்றிப்பார்த்தும் தண்ணீர் பெறத்தக்க உயர்ந்த வருணத்தவர் இல்லாமையினால் குருவிடம் வந்து சங்கதியைச் சொன்னான். அதற்கு அவர் நாம் இப் பொழுது எங்கே வந்து சேர்ந்திருக்கிறோ மென்று கேட்டார். சிஷ்யன், சுவாமி! இஃது ஒரு பறைச்சேரி: அதனால்தான் நமக்குத் தண்ணீர் கொடுக்கத் தக்கவர் இங்கு ஒருவருமில்லை யென்று கூற, குரு, அப்பா! நானோ சகிக்க முடியாத நோயினால் வருந்துகின்றேன்; எனக்கு மரண தாகம் போலக் கொடிய தாகம் உண்டாகி யிருக்கிறது. பறையரிட மிருந்தாவது கொஞ்சம் தண்ணீர் வாங்கிவா என்று மிகுந்த தாழ்ந்த குரலில் கூறினர்.

உடனே சிஷ்யன் தீவிரமாக ஓடிப்போய்த் தண்ணீர் வாங்கி வருவதற்குள்ளே குருவினுடைய ஆன்மா நீங்கியது. அதைக் கண்ணுற்ற சிஷ்யன் நாம் எவ்வளவு ஞான நூல்களைக் கற்றும் யாது பயன்? நமது குருவினுடைய ஆபத்துக்காலத்தில் ஆரம்பத்திலேயே பறையரிடமிருந்து தண்ணீர் வாங்கி வந்து கொடாமற் போனேமே. இந்தப் புத்தி யீனத்தினுல் நமது அருமையும் பெருமையும் பொருந்திய குரு மிகுந்த தாகத்தோடு உயிர் விடும்படி நேர்ந்ததே! அந்தோ! "என்ன பாதகத்தைச் செய்துவிட்டேன்," என்று சிந்தையை நொந்து கொண்டான். அந்த வியாகூலமே அவனது தேகத்தை உருக்கி முடிவில் தனது ஆவியை நீக்கும்படி நேர்ந்தது. குரு பறையரிட மிருந்தாவது தமக்குத் தண்ணீர் வராதா? என்று பறைச்சேரி ஞாபகத்தோடும், சிஷ்யன் தனக்கு மெய்யறி வூட்டிய குருவுக்கு அந்திய காலத்தில் தண்ணீர் கொடாத மகா பாதகனுகி விட்டோமேயென்ற மிகுந்த குருபத்தியோடும் இறந்தார்கள்.

"எப்பொருளைச் சிந்திப்பா னிவ்வுடல்விட் டேகும்போ
தப்பொருளையே யொருவனுர்ந்திடுவான்—பொற்பினவன்
எப்பொழுதுஞ் சிந்தித்திருந்திடலா லந் நினைப்பைச்
செப்பிய இவ் வுண்மைதனைத் தேர்"

என்ற ஓர் ஜீவன் முக்தரின் வாக்கியப்படி, குருவுக்குப் பறைய ஜன்மமும், சிஷ்யனுக்கு அந்த நகரத்தை ஆளும் அரச ஜன்மமும் கிடைத்தன. குரு பறையனுகப் பிறந்த போதிலும் விட்டகுறையால், தமக்கு முன்ஜென்மமுடிவில் ஏற்பட்ட எண்ண விசேஷத்தால் தாழ்ந்த ஜன்மம் வந்தது என்ற ஞாபகம் அவருக்கு நன்ருக இருந்தது. ஆதலால், பிறந்தது முதல் குழந்தை வாய்திறந்து சுத்தமிடாமல் மௌனமாக இருந்துவிட்டது. ஐந்து வயசுக்கு மேலாகியும் அந்தச் சிறுவன் மற்றச் சிறுவர்களோடு விளையாடப் போவது மில்லை; வாய்திறந்து பேசுவது மில்லை. ஆனதால், அவனை எல்லோரும் ஊமைப் பைய னென்றும்,மந்தப் பைய னென்றும் எள்ளனஞ் செய்து வந்தனர். அச்சிறுவனே பூர்வஜன்ம ஞாபகத்தினுல், நாம் பறையரோடு கலந்து நிலையில்லாத இம்மைச் சுகங்களை அனுபவித்துக் கொண்டு கடவுளை மறந்து

இருப்போமாயின் பின்னரும் ஜன்மத்திற்கு ஆளாக வேண்டிவருமே என்ற பயத்தை உடையவனாய் ஸதா காலமும் சிவத்யானஞ் செய்து கொண்டிருந்தான். இந்த ரகசியத்தை மற்றவர்கள் எவ்வாறு உணர முடியும்? சிஷ்யன் அரசன் குழந்தையாகப் பிறந்தும் பூர்வஜன்ம ஞாபகத்தால், நாம் செய்து வந்த குருபக்தி விசேஷத்தாலல்லவா நமக்கு இந்தச் சிறந்த பதவி கிடைத்தது. இதைக் கொண்டே நாம் ஏமார்ந்து விடாமல் சிவாநுக்கிரகத்தைப் பூரணமாகப் பெற முயல வேண்டும். நமது குரு எங்கே வந்து பிறந்திருக்கிறாரோ? எப்படியாவது அவரை நாம் அடையவேண்டுமென்ற எண்ணத்தோடு கடவுள் பக்தியுடையவனாகவும், தூயசிந்தை யுடையவனாகவும், சதாசாரத்தோடு கூடினவனாகவும், புத்தி தெரிந்த நாள் முதல் தன் காலத்தைக் கழித்து வருவானாயினான்.

இப்படி யிருக்கையில் காலக்கிரமத்தில் இந்தப்பிள்ளைக்குப் பட்டாபிஷேகமாக, அவனே அந்த நகரத்திற்கு அரசனானான். அப்பொழுது தன் ஊர்ப் பறைச்சேரியில் ஒரு பறையன் பிறந்தது முதல் மந்தனாகவும் ஊமையனாகவும் இருக்கிறானென்று கேள்வியுற்றான். உடனே, அரசனுடைய மனம் சற்று இளகியது. ஏன் இந்தச் சங்கதி கேட்டதும் தன் மனம் உருகியது என்ற தன்மை மாத்திரம் அவனுக்குப் புலப்படவில்லை. அந்த ஊமையினுடைய தகப்பன் நாள் தோறும் நடுராத்திரியில் வீதிகளில் பறை அடித்து ஊரார்களைச் ஜாக்கிரதையா யிருக்கும்படி அரசாட்சியாரால் நியுமிக்கப்பட்ட ஒரு பிரசித்தப் பறையனென்று அரசனுக்குத் தெரிய வந்தது. அது முதல் அரசன் தன் மனைவியோடு மேலுப்பரிகையில் பறையன் வந்து போமளவும் இருந்து விட்டுப் பள்ளியறைக்குப் போவதென்று தீர்மானித்து விட்டான். ஏன் அப்படி யேற்பாடு செய்தானென்றால் ஓரிரவாவது அந்த மந்தப் பறையன் தந்தைக்காகப் பறையடிக்க வந்தாலும் வருவான். அப்பொழுது அவன் வாக்கிலிருந்து வருஞ்சொல் எவ்விதமாக இருக்குமென்று பார்க்கவேண்டும் என்ற ஆவலினாலே இவ்வாறு அரசன் திட்டம் பண்ணினான். அரசன் மேலுப்பரிகையில் தன் மனைவியோடு சுகித்திருந்த போதிலும்,

"எத்தொழிலைச் செய்தாலு மேதவஸ்தைப் பட்டாலும்,
முத்தர் மனமிருக்கும் மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கை வீசி வந்தாலும்
தாதி மனம் நீர்க் குடத்தேதான்.

என்ற பட்டினத் தடிகளது திருவாக்கின்படி அரசன் உள்ளமானது விட்டகுறையின் விசேஷத்தால் எப்பொழுதும் சிவத்தியானத்திலே அமிழ்ந்து கிடந்தது. இவ்வாறு சிறிது காலம் நடந்துவருகையில், ஒரு நாள் ரோந்து சுற்றும் பறையனுக்குக் கொடிய தாபச்சுரம் உண்டாகி விட்டது. அன்று நடு ராத்திரி தனக்கு நியமிக்கப் பட்ட பணிவிடையைச் செய்து முடிக்கச் சாத்தியப்படாமல் போய்விட்டதே யென்ற துக்கம் அவனை வந்து பிடித்தது. தனக் கெதிரே நிற்கின்ற ஊமையனைக் கண்டதும், நமக்கு ஒரு ஆண்பிள்ளை இருக்கிறனென்பதினுல் என்ன பிரயோசனம்? இந்தச் சமயத்தில் அவனுல் என்ன உதவி செய்ய முடியும்? இந்தப் பிள்ளை இருந்தாலென்ன? இல்லாமற் போனு லென்ன? இரண்டும் சரிதான் என்று வாய்விட்டுப் பிரலாபிக்க லானுன். ஒரு நாளும் அசையாது ஊமையனைப் போல மௌனமாயிருந்த அவன், தினந்தோறும் தகப்பன் செய்து வந்த தொழிலைப் பார்த்திருந்தபடியால் அங்கு ஒரு ஆணியில் மாட்டியிருந்த பறையைக் கழுத்தி லெடுத்து மாட்டிக் கொண்டு, ஒன்றும் பேசாது அடிக்குங் கோல்களையு மெடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு விட்டான். இதைக் கண்டதும் சுரத்தினுல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தகப்பனுக்கு மிகுந்த மனமகிழ்ச்சி யுண்டாகி விட்டது. அந்த ஊமையன் முன் ஜன்மத்தில் மகாஞானியானதால், ஒரு சிவசந்நிதானத்தை அடைந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டு நடு நிசியானவுடன் கிழக்கு வீதியில் போய்ச் சற்று நேரம் பறையடித்து விட்டு,

"சனித்தலுந் துக்கஞ் சரையுறலுந் துக்கம்
மனைக்கிழத்தியுந் துக்க மாறு—தனர்த்தமிகு
சஞ்சார சாகரமுந் துக்கமா மாதலினுல்
துஞ்சாதீர் துஞ்சாதீர் சோர்ந்து"

என்ற வெண்பாவை உரக்கக் கூவி ஜனங்களை எச்சரிக்கை செய்தான். இவ்விஷயத்தைக் கேட்கவேண்டு மென்றே

உப்பரிகையில் நெடுங்காலமாகக் காத்திருந்த அரசன் காதில் அச்செய்யுளின் அர்த்தம் புகுந்தது. அக்கினிக்கு முன் எதிர்பட்ட வெண்ணெய்க்கட்டிபோல அவன் சிந்தை உருகத் தொடங்கியது. உடனே அவன் ஓர் தூதனை அழைத்து அப்பறையன் தனது பணிவிடைகளை முடித்துக் கொண்டு கிழக்கு வீதிக்குத் திரும்பி வருகையில், நமது அரண்மனைவாயிலுக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டு அனுப்பினான். தெற்கு வீதியிற் சென்ற மந்தப்பறையன் அங்கே கொஞ்ச நாழிகை வரையில் பறையை முழக்கி விட்டு,

> " பேராசை யாற்பார் பிணிக்கப் படுகிறது
> ஏரார் தொழிலாலு மெண்ணலுஞ்—சோர்வாகி
> ஓங்காயுளின் குறைவை யோர்வதில்லை யாதலினால்
> தூங்காதீர் தூங்காதீர் சோர்ந்து "

என்று உரக்கக் கூவி எச்சரிக்கை செய்தான். அப்பால், மேற்கு வீதியை யடைந்து சிறிது நேரம் பறை கொட்டி விட்டு,

> " காமன் குரோதன் கடுலோப னென்கின்ற
> நாமத்திருடர் பலர் ஞானமணி—தாமிங்
> கொழித்துக் கவர வுடலூற்றுரின்னே
> விழிக்க விழிக்க விரைந்து "

என்று உரக்கக் கூவி விட்டு வடக்கு வீதிக்கு வந்தான். அங்கு நின்று மிகுந்த ஆவேசத்துடன் பறை அடித்து விட்டு,

> " தாயில்லைத் தந்தையில்லைச் சார் சோதரரில்லை
> ஏய கிளைஞர்களி யாருமில்லை—நேயங்
> கெழுமு பொருளில்லைக் கிருகமில்லை யென்றே
> ஒழிமி னொழிமி னுறக்கு "

என்று பலமாக எச்சரிக்கை செய்துவிட்டு, மறுபடியும் கிழக்கு வீதிக்கு வருகையில் தன்னை மறந்து ஆனந்தத் தாண்டவ மாடிக் கொண்டு,

> " தந்தை சதாசிவனே தாயவன் வல்லமையே
> அந்தமிலாச் சுற்ற மவனடியார்—சொந்த
> இடமாகு மூவுலகு மென்று மகிழ்வுற்று
> மடமாவ தற்று நெஞ்சே வாழ் "

என்னுஞ் செய்யுளைப் பாடிக்கொண்டு ஸ்தம்பம் போலச் சிறிது நேரம் சலனமின்றி நின்ருன். இவனுடைய வரவை எதிர் நோக்கிக் கொண்டு தயாராக இருந்த தூதன் அரசன் ஆக்ஞையைக் கூறி, அவனை அரண்மனை வாசலில் கொண்டு வந்து விட்டான். அரசன் மிகுந்த ஆனந்தத் தோடு ஓடி வந்து அவரைக் கண்டவுடன், "பிரிந்தவர் கூடி ஞல் பேசல் வேண்டுமோ?" என்று கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் கூறியது போலத் தன்வசமழிந்து கண்ணீருடன் அவருடைய பாதாம்புயங்களில் அடியற்ற மரம்போல வீழ்ந்தான். அதன் பின்னர், இருவரும் ஏதோ பரிபாஷை பேசிக் கொண்டு, போனவிட மின்ன தென்று மற்றவர் களுக்குத் தெரியாமல் போய்விட்டார்கள். அவர்க ளிருவருக் கும் விட்டகுறை வந்து தொட்டுக் கொண்ட அந்த ஜன்மத்திலேயே பரமுக்தியை அடைந்தார்களென்று நாம் சொல்லவும் வேண்டுமா?

பெ. க.

குளித்து முழுகும் குருவி

(பாலி. சு. நெல்லையப்ப பிள்ளை பாடியது)

குளித்து முழுகும் குருவி!—உந்தன்
கோலத்தைக் கண்டு மகிழ்ந்தேன்
தெளித்த நன்னீரில் குளிப்பாய்—உன்
சிந்தையின் பெய்திக் களிப்பாய். 1

சுத்தத்தை நாடிக் குளிப்பாய்—உன்
தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தேன்.
பித்தர்கள் எண்ணிலர் மாந்தர்—அவர்
பெரிதும் அசுத்தத்தில் மாள்வார். 2

சுத்த உடைகள் உடுத்தார்—அவர்
தூய குணங்களைக் கொள்ளார்.
மித்தைகள் பேசிக் கழிப்பார்—அவர்
மெலிந்து வருந்திக் கழிவார். 3

சின்னஞ் சிறிய குருவி !—உந்தன்
சீரினைக் கண்டபின் தேனும்
என்னின மாந்தர்கள் உந்தன்
இயற்கையைக் கொள்ள லாகாதோ ? 4

பறவையும் விலங்கினந் தானும்—இந்தப்
பாரினில் சுத்தத்தை நாடும்
அறிவில் மிகுத்தவ ரென்பார்—இந்த
அறிவற்ற மானிடர் என்னே ! 5

நோயிலும் பேயிலும் வாழ்வார்—அவர்
நுவலரு நரகத்தில் வாழ்வார்.
ஆயிரம் கூறியும் என்னே !—அவர்
அறிவு திருந்திடல் என்றோ ? 6

வாரத்தில் குளிப்பவ ருண்டு !—அரை
மாதத்திற் கொருமுறை உண்டு !
சீரற்ற மாந்தரிங் கிவர்கள்—நன்கு
தினந்தினங் குளித்திடல் என்றோ ? 7

பன்முறை நித்தம் குளிப்பாய்—உந்தன்
பான்மையைக் கண்டு மகிழ்ந்தேன்
என்னவர் நன்றுறு மாறு—இதை
இசைத்து வைத்தே னடி வாழி ! 8

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

129-ம் பக்கம் தொடர்ச்சி.

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

சிவகணத் தலைவர்கள் மள்ளராகவும் அமைய, ஒரு புறம் உழுவதும், ஒருபுறம் நீர் பாய்த்துவதும, ஆக வயற் றொழிலில் பலவற்றையும் நடத்துவித் திருந்தனர். இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி முதலாயின தேவியர் பள்ளிக

ளாய் உமாதேவியாம் பச்சைப் பள்ளியின் சொல்வழிக் கழனியில் நாறு நட்டனர். இவர்கள் இவ்வா றமர, சோயிலுள் இறைவனைக் காணது திகைத்த ஆரூரர் ஆண்டிருந்த இடபதேவரை இறைவன் யாண்டுள்ளார் என வினவினர். தாமுள்ள இடத்தை வன்றொண்டருக்குச் சொல்லாதே எனச் சுவாமி சொல்லி யிருந்தபடியால் இடபதேவர் வாயைத்திறவாது கண்ணினல் இறைவனுள்ள இடத்தைக் குறிப்பாய்க் காட்டினர். அக் குறிப்பின்வழியே வயற்புறம் வந்து,

> வேத நாடரிய விழுப்பெரும் பொருளாய்
> விளங்கிய பட்டி நாயகருஞ்
>
> சீதவாண் முகத்து மரகத மயிலுந்
> தேவர் பூதர்கள் புடை நெருங்கப்
>
> பாத தாமரைகள் சேதகத் தலரப்
> பயிறிரு விழாவினைத் தொண்டர்
>
> காதன்மீக் கூரச் சேயிடை நோக்கிக்
> களிப்பொடு மெதிர்பணிந் தெழுந்தார்!

வந்த ஆரூரரைப் பாராததுபோல தமது வயற்றொழிலையே நாடி யிருந்தனர் நமது பெருமான். ஆரூரரும் அதுகண்டு மகிழ்ந்து, "ஐயனே! முன்னர் என்பொருட்டுக் குலத்திற் சிறந்த வேதியனாக வந்து விளையாடினாய்; அரசனாக மதுரை மாநகரில் அரசு புரிந்தனை; செட்டியாக வளையல் விற்றனை; சூத்திரனாக விறகு விற்றனை; வலைஞனாகத் தேவியை வேட்டனை; உனது சங்கரன் என்னும் பெயரே சங்கர ஜாதியைக் குறிக்கும்; விஜயன் பொருட்டு வேட ணாயினை; யாவரும் பணிய நிற்றலாலும் பாம்பை யணிந்துள்ள காரணத்தாலும் "பணிசிவ" னாயினை; முக்கண்பெற்ற நக்கனாதலின் "முக் கணக்க" னாயினை; அகத்தே பரிசுத்த சொரூபி யாதலின் "அம் பட்டன"யினை; புறத்தே முப்பாழும் பர்ழாய் முடிவிலொரு சூனியமாய் வெட்டை வெளியாய்க் காலியாய் அரூபியாய் நிற்றலின் "புறத்தேகாலி" யாயினை; பாம்பை இடையி லணிந்த காரணத்தால் "அரவமா ரிடைய"னாயினை; சோமாசிமாறனார் பொருட்டுப் பறைய னாயினை; இன்று என்பொருட்டுப் பள்ள னுமாயினை;

என்னே உன் திருக்கூத்து**. உனது மூத்தபிள்ளையோ எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக் கூட்டுவிக்குங் கஜமுகப் பிள்ளை, இளைய பிள்ளையோ நிறைசெல்வச் செட்டியார்; மனைவியோ அன்னபூரணி; நண்பனோ குபேரன்; இங்ஙனம் இருக்க யார்பொருட்டு நீவருந்தி வயலிடத் துழுவது; அராப் பள்ளியாற் கருளும் அப்பனே; அகத்தியான் பள்ளி மேவிய அண்ணலே! சக்கரப்பள்ளி மேவிய சொக்கனே! திரிசிராப்பள்ளி யமர்ந்த தேவனே! மயேந்திரப் பள்ளி மேவிய மன்னவா! திரு நனிபள்ளி, திருச்செம்பொன் பள்ளி, திருக்காட்டுப்பள்ளி என்னுந் தலங்கள் மீதுள்ள காதலோ உம்மைப் பள்ளியாகத் திருவுருக் கொண்டு விளையாடச் செய்தது? என உரையாடினர். இறைவனும் "ஏது, இவன் துடைக்கிலும் போகான்" எனத் தேர்ந்து திருக்கோயிலுள் தோழத் தம்பிரானோடு மீண்டனர். மீண்டவர், ஆரூரர் கண்குளிர, உள்ளங் குளிரத் தில்லையி லருளிய நடன தரிசனத்தைத் தர, ஆரூரருங் கை குவித்துக் கண்ணீர் சொரியத் தொழுது எல்லை படாத இன்ப வெள்ளத்து ளாழ்ந்தனர். பின்னர், வெஞ்சமாக் கூடல், திருக்கற்குடி, ஆறைமேற்றளி, இன்னம்பர் என்னுந் தலங்களைத் தொழுது,

"அங்க மோதியோ ராறை மேற்றளி
நின்றும் போந்துவந் தின்னம்பர்த்

தங்கி னோமையு மின்ன தென்றில
ரீச னாரெழு நெஞ்சமே

கங்கு லேமங்கள் கொண்டு தேவர்க
ளோதி வானவர் தாந்தொழும்

** மறையவ னரசன் செட்டி தன்தாதை
வயங்கு நூற் சூத்திரன் புவனம்

பறைதரு நல்ல சங்கரன் வேடன்
பணி சிவன் விளங்குமுக் கணக்க

னறைசெயம் பட்ட னகமதி புறத்தே
காலியாட் டரவமா ரிடையன்

பறையனு முன்ன ரானகீ யின்று
பள்ளனு னமைதெரிந் தேன்யான்.

[பேரூர்ப் புராணம்.]

பொங்கு மால்விடை யேறி செல்வப்
புறம்ப யங்தொழப் போதுமே"

எனவரும் 35-வது திருப்பதிகத்தைப் பாடித் திருப் புறம் பயஞ் சேர்ந்தனர்.

(கூடலையாற்றூரில் இறைவன் வழிபோந்தது)

பின்னர்த் திருப் புறம்பயம் நீங்கிப் பல தலங்களைப் பரவிக் கூடலை யாற்றூருக்குச் சமீபமாகச் செல்பவர் அங்குப் போகாது விருத்தா சலத்துக்குச் செல்லுங் கருத்தினராய்ப் போய்க்கொண்டிருக்க முப்புரிநூல் விளங்கும் வேதியராக இறைவன் எதிர் தோன்றி நின்றனர். அவரை நோக்கி நம்பியாரூரர் "ஐயா! யான் திருமுது குன்றம் (விருத்தாசலம்) சேரும் வழியைக் காட்டுதிர்" என வினவ, வேதியரும் இவ்வழி நேரே கூடலை யாற்றூருக்குப் போகும் வழி என்று வழிகாட்டிச் சென்று கூடலை யாற்றூர் சமீபித்துத் திடீரென மறைந்தனர். ஆரூரருங் கைகூப்பித் தொழுது,

"வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமை யோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலையாற் றூரி
லடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே"

எனவரும் 85-வது திருப்பதிகத்தைப் பாடினர்.

(விருத்தாசலத்திற் பொன் பெற்றது)

பின்னர் விருத்தாசலஞ் சென்றனர். அங்கு இறைவனைப் பொன் வேண்டிப் பாட இறைவனும் பன்னிரண்டாயிரம் பொன் தந்தனர். ஆரூரர் பின்னும் "திருவருள் கொடுத்த இப் பொன் எல்லாம் திருவாரூரில் உள்ளவர்கள் வியக்கும்படியாக அங்கே வரப் பெறவேண்டும்" என வேண்டினர். உடனே "இப்பொருளை இம் மணிமுத்த நதியிலிட்டுப் பின்னர்த் திருவாரூர்க் குளத்தில் எடுத்துக் கொள்வாயாக" என ஒரு அசரீரி வாக்கு எழுந்தது. வன்றொண்டரும் பொன்னின் மாற்று எடுத்து வைத்துக் கொண்டு எல்லாப் பொன்னையும் மணிமுத்த நதியின் நீருட் புகப் பெய்து "இறைவன் என்னை வலிய ஆட் கொண்ட அருளின் திறத்தை இதில் அறிவேன்" என்று

 210332

கூறி அங்கிருந்து புறப்பட்டுக் கடம்பூர் முதலிய தலங்களைத் தரிசித்துத் தில்லை மூதூருக்கு வந்தனர். அங்குப் பேரூரில் அருளிய நடன தரிசனக் கோலத்தை நினைந்து,

"மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கி லிடும்போது தடுத்தாட்கொள் [வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே"

எனத் துவக்கும் 90-வது திருப் பதிகத்தைப் பாடிக் "கொங்கி லணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே" எனப் போற்றினர். பின்னர்த் திருக்கருப்பறியலூர், திருமண்ணிப் படிக்கரை, வாளொளிபுற்றூர், கானாட்டுமுள்ளூர், எதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாரூர் வந்து சேர்ந்து பரவையாரின் திருமாளிகையில் அமர்ந்தனர்.

(நதியிலிட்ட பொன்னைக் குளத்தி லெடுத்தது)

ஆரூரரும் பரவையாரை நோக்கி "நாயனார் நமக்கு விருத்தாசலத்தி லளித்த பொற்குவியலை அங்குள்ள மணிமுத்த நதியிற் புகவிட்டேம். நீ சென்று இவ் வாரூர்த் திருக்குளத்தின் மேல் பால் அவ ரருளாலே தேடி எடுத்துக் கொள்வாயாக" என்றனர். "இஃதென்ன அதிசயம்" எனப் பரவையார் ஐயத்துடன் புன்முறுவல் செய்ய "நாதன் அருளால் நான் எடுத்துத் தருகிறேன், வா" எனப் பரவையாருடன் ஆரூரர் பூங்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிக் குளத்தின் மேலைப் பாங்கரில் வடகீழ்ப் பக்கம் பரவையாரை யிருக்கச் செய்து பரசிவத்தைத் தியானஞ் செய்து கைதொழுது குளத்தி லிறங்கி அங்கு வைத்தவர் போலத் தடவித் தேடினார். என்ன தேடியுங் கிடைக்க வில்லை. பாட்டில் விருப்புடைய பரசிவம் பாடாது தேடினாற் பொன் தருமோ? இவர் தேடித் தேடியும் தடவித் தடவியும் பொன் கிடையாது போக, பரவையாரும், அப்பர் சுவாமிகள்* "ஆற்றிற் கொடுத்துக் குளத்

---

*தேற்றப் படத்திரு நல்லூ ரகத்தே சிவனிருந்தால் [யால்
தோற்றப் படச்சென்று கண்டுகொள்ளார் தொண்டர் துன்மதி
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய வாதரைப்போல்
காற்றிற் கடுத்துல கெல்லாந் திரிதர்வர் காண்பதற்கே
—திருநல்லூர்த் திருவிருத்தம்.

தினிற் றேடிய ஆதரைப் போல்" எனப் பாடிய திருப் பாட்டை நினைந்தோ, புன் முறுவல் செய்து "நீர் ஆற்றி லிட்டுக் குளத்திற் றேடுவீர்" எனப் பரிகசித்தனர். அதைக் கேட்ட ஆரூரரும் "இறைவா! இதுவும் உன் திருக் கூத்தோ" என மாழ்கிப்

பொன் செய்த மேனியினீர் புலித் தோலை யரைக் கசைத்தீர்
முன் செய்த மூவெயிலு மெரித் தீர்முது குன்றமர்ந்தீர்
முன் செய்த நுண்ணிடையாள் பரவை யிவள் தன் முகப்பே
யென் செய்த வாறடிகே ளடியே னிட்டளங் கெடவே.

என வரும் (25-வது) திருப்பதிகத்தைப் பாடினர். எட்டுப் பாடல் பாடியுங் கிட்டா தொழிய,

ஏத்தா திருந் தறியே னிமை யோர்தனி நாயகனே
மூத்தா யுலகுக் கெல்லா முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவை யிவள் தன் முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேனிட் டளங் கெடவே

என்னும் ஒன்பதாவது அருமைத் திருப் பாடலைச் சொல்லப் பொற்குவியல் அப்படியே கிடைக்க அதைக் கரையேற்றினர். கண்டவர் யாவரும் அதிசய முற்றனர். என்னே இவருக்கு இறைவன் திருவருள் இருந்தவா றென்றனர். வானவர் பூ மழை பொழிந்தனர்.

கோழிக் கொடி

கற்றவின்சொற் பைங்கிளியே காதலனார் நந்தணிகைக்
கொற்றவன்கைக் கொண்ட கோடிகூறாய்—உற்றவிணில்
ஊழியாம் போது முலவா உடுக்கொறித்த
கோழியாங் கொண்ட கொடி.—திருத்தணிகேசன் தசாங்கம்.

ஸ்ரீ நீலகண்டப் பெருமானுக்கு இடபக் கொடி, ஸ்ரீ லக்ஷ்மீ காந்தருக்குக் கருடக் கொடி, நமது முருகப் பெருமானுக்குக் கோழிக் கொடி. முருகக் கடவுளின் வேலாயுதத்தின் பெருமையையும் மயில் வாகனத்தின் மகிமையையும் யாவரும் உணர்வர். "வேலு மயிலுந் துணை" என்னும் மந்திரமே அவைகளின் சிறப்புக்குச் சான்றும். ஆனல் கோழியின் பெருமை அவ்வளவு பிரசித்தமாக அடியார்களுக்கு வெளிவர வில்லை. ஆறுமுகப் பெருமானது உண்மை அடியார்களது நூல்களை ஆராயும் போது அந் நூல்களுள் வேலுக்கும் மயிலுக்கும் எத்

துணைச் சிறப்புக் கூறப்பட்டுளதோ அத்துணைச் சிறப்பு கோழிக்குங் கூறப்பட்டுளது என்பது தெளிவாக ஏற்படு கின்றது. மெய்ஞ்ஞானியராம் ஸ்ரீ அருணகிரிநாதர்

"ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்" (கந்தர் அநுபூதி)

"தக்குடமும் ரக்ஷைதரு சிற்றடியும்
முற்றிய பனிரு தோளும், வைத்துயர் திருப்புகழ்
விருப்பமொடு செப்பென எனக்கருள்கை மறவேனே"
(திருப்புகழ்)

"ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்குமே கந்தவேள் மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங்கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே"
(கந்த ரலங்காரம்)

எனக் கோழியை வேல், மயில் இவைகளோ டொப்பச் சிறப்பித்துள்ளார். இதன் உண்மை தெரிந்த பெரியார் ஒரு வர் பதினைந்துவருடங்களுக்கு முன் சில விசேட ஸ்தலங்க ளில்உள்ள முருகருக்கு வெள்ளியில் கோழிக்கொடி செய்து அதிற் பொற்கோழி அமைத்துச் சமர்ப்பித்தனர். அவ் வாறே ஸ்தலங்கள் தோறும் அன்பர்கள் கோழிக்கொடி செய்வித்துச் சமர்ப்பிப்பாராயின் அதனால் வரும் பயன் அறுமுகப் பெருமான் அறிவரே ஒழிய எம்போலியரால் இயம்ப ஒண்ணாது. நிற்க.
விடியற்காலையிற் கடவுளைத் தியானம் செய்வது மிக விசே டமான செயல். பெரியோர்களெல்லாம்

"காலை யெழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய்
கறைக் கண்டா" (சுந்தரர் தேவாரம்)

எனவும்,

"காலையி லெழுந்துனாம மொழிந்து
காதலுமை மைந்த என ஓதி" (திருப்புகழ்)

எனவும்—காலைத் தியானத்தை விசேடித்துக் கூறி யிருக் கின்றன ரல்லவா? இதனுண்மையை நமக்குப் புலப்பட உணர்த்துவது கோழியே. அது விடியற்காலையிற் "கொக் கறுகோ" எனக் கூவுவதைத் தினமுங் கேட்கின்றோம்.

முருகரின் கொடியாகிய கோழி அவர் பெயரைக் கூறிக் கூவாது வேறு கூவுமோ? ஆதலின் "கொக்கறுகோ" என்பதன் பொருள் யாது? என ஆராய்வோம். ஆராய்ந் தால், கொக்கு=(சூரனாகிய) மாமரத்தை, அறு=அறுத்த, கோ=தலைவனே! என நமது கந்தபிரானையே அவ்வொலி குறிக்கின்றது. காலையில் நிதமும் முருகபிரானைக் 'கொக் கறுகோ' எனக் கோழியானது கூவிப் பரவ சூரியன் உதிப் பதுபோல முருகப் பிரானை நாமுங் காலையில் நிதமும் பாடிப் பரவினால் ஞான சூரியனாகிய திருக்கைவேற் பெருமான் திருவருள் கூடி ஆணவமாதி இருள் ஒழியும். இவ்வுண் மையை உணர்த்தவே கோழியைக் கொடியாக எம்பிரான் ஏந்தினர் போலும்.

"கொக்கறுகோ" என விடியற் காலைநிதந்
　　நீகூவிக் குறிக்குஞ் சூட்சிப்
பக்குவத்தை யின்றுணர்ந்தேன் சேவலே!
　　என் போலப் பாருளீர் நீர்
"கொக்கறுகோ" என முருகன் திருநாமங்
　　காலைநிதங் கூறுவீரேல்
சிக்கறுமே பிறவியிருள் மெய்ஞ்ஞான
　　பானுஎழுந் தோர்மி னென்பாய்!

(வரும்)

மனோன்மணீய வசனம்

(ஸ்ரீமான் S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.)

அதிகாரம் III: வாணியின் காதல்.

(139-ம் பக்கம் தொடர்ச்சி)

மனோன்மணி வாணியின் இன்னுயிர்த்தோழி யென்று முன் னமே கூறினோம். இவள் ஒழுக்கந் தவறாத உளத்தினள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளியப்பட்டனவற்றையே நம்பும் இயற் கையினள்; நன்றல்லவெனத் தான் கருதினவற்றை அகற்றிவிடும்

துணிவும் மனத்திட்பமும் உடையவள். இவ்வாணி நடராஜன் என்ற ஓர் அழகமைந்த ஆநந்த புருஷனை யறிய, அவர்களிருவர் உள்ளமும் ஒரு வழிப் படர்ந்து காதல் நேர்ந்தது.

காதலரது நெறி இடையூறின்றி இனிது செல்வதன்று என்பது லோகப் பிரசித்த மல்லவா? வாணியின் பிதாவாகிய சகடர் ஓர் வன்-கிழவர். பொருளாசை யொன்றே அவர் மனத்திற் குடி கொண்டிருந்தது. பொருளைச் சேகரித்துத் திரட்டி வைத்துப் பார்ப்பதிலே தான் மக்களுக்கு இன்பம் உண்டாகக் கூடு மென்ற திடமான நம்பிக்கை இவருக்கு இருந்தது. இவர் தமது ஏகபுத் திரியாகிய வாணியைக் குடில மந்திரியின் ஏகபுத்திரனாகிய பலதேவனுக்கு மணஞ் செய்து கொடுத்து அளவற்ற செல் வமும் கௌரவமும் அடைந்து விடலாம் என்ற பேராசையால் விழுங்கப்பட்டிருந்தார். தாம் கருதிய மணம் தமது மகளது அபீஷ்டத்திற்கு முற்றும் மாறுபட்டதென்பதும் இவர்க்கு ஓர் பொருட்டன்று. தாம் குறித்த மணவாளன் ஒரு துன்மார்க்கன் என்பதுங்கூட இவரது சித்தத்தைக் கலக்க வில்லை. தமது கருத்தை எப்படியும் முடித்துவிட வேண்டு மென்ற உறுதி நாளுக்கு நாள் வலிபெற்றுக் கொண்டே வந்தது. வாணியோ, தனது காதலை அடக்க மாக வைத்துக்கொள்ளவு மில்லை. நடராஜனை அகஸ்மாத்தாய்ச் சந்திக்க நேர்ந்தபொழுதெல்லாம் காதலரிருவரும் சம்பாஷித்து அள வளாவி யிருந்து பிரிவார்கள். தமது நோக்கம் நிறை வேறுமற் போய்விடுமோ என்ற திகில் சகடரையும் அவரது கருத்திற் கிசைந்த மனைவியையும் அடிக்கடி வருத்தியது. இதனால் தாய் தந்தைய ரிருவரும் வாணியை மிகவும் கண்டித்து வந்தார்கள். ஆகவே வாணிக்கு விளைந்த சோகம் அளவிட்டுரைக்க முடியாததாயிற்று.

தனது துன்பத்தை மனோன்மணியிடம் வாணி தெரிவித்துக் கொள்ளுதலும் மனோன்மணி ஆறுதல் அளித்தலும் வழக்கமா யிருந் தது. தோழியர் இருவரும் ஒத்த பருவத்தினர். பதினறுவது வயது. ஆனால் இருவரது மன நிலையும் பெரிதும் வேறுபட்டது. மனோன் மணியின் உள்ளமோ லௌகிகப் பற்றின் சாயைபோலும் இல்லா தாகிக் குழந்தையர் மனம் போலக் களங்கமற்று நிர்மலமாக விளங் கிற்று. வாணியின் உள்ளமோ காதல் என்னும் தேனை உட்கொள்ளு

தற்கெனப் பருவ காலத்திற்கு முன்னரே அலர்ந்து நின்ற மலர் போன்று இருந்தது. இவ்வேற்றுமையினுல், வாணியின் காதல் ரகசியம் ஒன்றும் மனோன்மணிக்கு அறிதற் கரிதாயிற்று.

ஒரு நாள் மாலை அரண்மனையில் கன்னி மாடத்திலே மனோன் மணியும் வாணியும் கழல் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கழல் விளையாட்டு என்பது இப்பொழுது கிராமாந்தரங்களிற் காணப்படு கிறதேயொழிய பட்டணக்கரைகளிலிருந்து ஒதுங்கி வருகிறது. எனினும் நமது வாசகர்களுக்கு இவ் ஆடல் தெரியாதென்று கருத இடமில்லை. கழல் விளையாடும்போது ஆடலுக்கிசையப் பாடுதல் மரபு என்பது யாவரும் அறிந்ததே. இவ்வண்ணமே, தோழியர் இருவரும் தம் தம் முறையிற் பாடிக் கழல் விளையாடினர். வாணி கடைசியாக

‘உருவங் கரந்தாலென்? ஓர் மல ரம்பினுல்
அரையுரு வானரென் ருடாய் கழல்
அந் நடராஜ ரென் ருடாய் கழல்’

என்ற பாட்டினை மனமுருகப் பாடி ‘நடராஜர்’ என்ற பெயர் வரவும் நெடு மூச்செறிந்தாள். அதைப் பார்த்து

மனோன்மணி :—பெயரை மெள்ள விழுங்குகிறுயே! உனக்கு என்ன நாணமா? கலியாணமும் ஆச்சுபோலிருக்கிறதே! என்றுள்.

வாணி :—ஏனம்மா, சூது நினைக்கிறுய். நான் ஒன்றும் கருத வில்லையே! உச்சத்தில் பாடினுல் மூச்சு எய்த்து விடாதா?

மனோ :—ஒளிப்பு என்னத்திற்கு? அகத்திலுள்ள கள்ளமெல்லாம் முகத்தில் தான் வெளியாகிறதே. இருக்கட்டும் நேற்று உன் காதலர் என்ன கூறினுர்?

வாணி :—என்ன கொடுமையெல்லாம் சொல்லுகிறுய்! நான் அவரைப் பார்த்து நாலைந்து நாள் ஆகி விட்டதே.

மனோ :—“காதல்,” காதல், என்றதெல்லாம் போய்விட்டதா? ஒரு நாள்கூட காணுமலிருக்கமாட்டோம் என்ற சபதம் என்னம்மா ஆயிற்று? இதற்குக் காரணம் யாரம்மா? இவ்வாறு மனோன் மணி கூறியதும் வாணிக்கு விசனம் தாங்கக்கூட வில்லை. கண்ணீர் சிந்திக்கொண்டே,

வாணி :—என்னத்தைச் சொல்லுவேன்? தலை விதியைத்தான் நொந்து கொள்ள வேண்டும். இருக்கட்டும் விளையாடுவோம், வா. இது யாருடைய முறை?

மனோ :—ஏனிது! வாணி! மனத்தில் அடக்கி வைத்துக்கொள்ளுதல் நல்லதல்லவே, என்னிடத்தில் சொல்லத் தடையென்ன?

வாணி —எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. தலை விதியைத் தடுக்க முடியுமா? அனுபவித்துத்தானே தொலையவேண்டிய

திருக்கிறது? வீட்டில் தாயும் தந்தையும் கொடும்பாவிகளா யிருக்கிருர்கள். நான் படும் துன்பம் அவர்கள் நெஞ்சில் சிறிதும் படவில்லை. எனது உயிர்க் குயிராயிருக்கும் காதலர்க் கும் கொடுமை யிழைத்தார்கள். அவர்கள் கொண்ட கருத்தை எப்படியாவது நிறை வேற்றத் துணிந்திருக்கிருர்கள். யாரோடு என் குறைகளைச் சொல்லி யழுவது? வாழ் விழந்து நான் சீக் கிரம் இறந்து படுவேன். இது மட்டும் நிச்சயம்.

மனோ :—அது இருக்கட்டும், நான் கேட்கிறேன் சொல்லு. உனக்குத் தான் ஏன் இந்த முரண்டு? பலதேவனை மணந்தால் என்ன?

வாணி :—என்ன சொன்னுய்? இது மட்டும் பேசாதே. நஞ்சுக்குப் பயப்படுவதைக் காட்டிலும் அதிகமாக அல்லவோ உன் சொல்லுக்கு அஞ்ச வேண்டியதிருக்கிறது. கேள்: செத்தாலும் அதற்கு இணங்கமாட்டேன். என் அகம் புகுந்து இடங் கொண்ட காதலரை, அவராக என்னைத் துறந்து விடுவதாறு லும், நான் மறக்கவே முடியாது. ஜீவ னிருக்கிறவரையும் நான் இன்னொருவனை ஆடவனுகவும் கருதமாட்டேன்.

மனோ :—வாணி! உனக்கு என்ன, பேயா பித்தா பிடித்திருக்கிறது? என்ன நினைத்தாய்! குடில மந்திரியின் ஏக புத்திரனும், சகல வித சௌபாக்கியங்களும் நிறைந்தவனும் அரசருக்கு அத்தி யந்தப்பிரியனும் ஆகிய பலதேவன் எங்கே? நீ மனத்தில் கொண்டிருக்கிற நடராஜர் எங்கே? இருவருக்கும் ஒப்புத்தான் உண்டா?

வாணி :—காதலின் தன்மை உனக்கு ஒன்றும் தெரியாது. மகளிரது உள்ளம் உருகிப் பாய்ந்து காதல் மயமாதல் ஏதேனும் ஒரு காரணம் பற்றியல்ல. காற்றும் காதலும் எழுவதற்குக் காரணம் சொல்லவே முடியாது. இதனுல் தான் இவை யிரண்டும் தம் முள்ளத் திருக்கின்றனவென அறிந்தோர் கூறுவர். சொல் லென்ன வேண்டிய திருக்கிறது? நீயே ஆலோசித்துப் பார்.

மனோ :—நீ புகல்வது புதுமை யம்மா! இவ்விதம் தான் பெண் களுடைய காதல் இருக்குமானுல் அது அருவருக்கத் தக்கதே. காதல் கொள்ளுவதற்குக் காரணமுங் கிடையாதாம்! அது

என்ன? தானறியாப் பேயாட்டந் தானே? எப்படியேனும் போகட்டும். இவர்களிரண்டு பேரும் எவ்வகையிலேனும் சமமவாரா?

வாணி :—எப்படி நான் ஒப்பிட முடியும்? என் உள்ளந்தான் ஏற்கெனவே என் காதலரது வடிவழகில் மாய்ந்து விட்டதே.

மனோ :—பைத்தியங் கொண்டவள் போல் பிதற்றுகிறாயே! நம்முடைய மனத்தை அடக்கி யாளுவோமானால், அது எப்படி நம்மைக் கடந்து ஓடிவிடும்?

வாணி :—இதெல்லாம் உன்னிடத்தில் சொல்லிக்கொண்டிருக்க யாருக்குத் தெரியும்? இக்காதல் பெண்பாலாரனைவர்க்கும் உரியதென்பது மட்டும் தான் அறியக்கூடியது.

மனோ :—அப்படியா நினைக்கிறாய்? எனது ஆசை யெல்லாம் வனஞ்சென்று மரவுரி புனைந்து மனத்தை யடக்கித் தவஞ் செய்து கொண்டிருக்கத்தான். சுந்தர முனிவருடைய

"சிந்துர அடியும்,
வாரிசம் போல மலர்ந்த வதனமும்,
கருணை அலை யெறிந்து ஒழுகுங் கண்ணும்,
பரிவுடன் முகிழ்க்கு முறுவலும், பால்போல்
நரை தரு தலையும், புரையறும் உரையும்
சாந்தமும் தயையும் தங்கிய உடலும்"

இவற்றை யெல்லாம் நினைக்க நினைக்க என் நெஞ்சம் தவத்திலேயே ஈடுபட்டு நிற்கின்றது.

வாணி :—துள்ளாதே, கொஞ்ச நாள் போகட்டும். உன் உறுதியைப் பார்ப்போம். உன்னைக் கைகடந்து காதல் பெருகி வரும் போது தான் அதன் ஆற்றல் உனக்கும் புலப்படும்.

மனோ :—வேண்டுமானால் பார்த்துக்கொள். வீண் வார்த்தை ஏன்? காதல் என்பது என்ன? பூதமா? பேயா? வெருட்டினால் நாய் போல ஓடி விடும். கொஞ்சமேனும் பயப்பட்டாலோ நம்மை வெகு தொலைக்குத் துரத்தும். இவ்வளவுதான். முனிவர் அடிக்கடி யிங்கே வருவார். அந்த அடுத்த அறையில் ஏதோ சக்கரம் வைப்பதற்காகத் திறவுகோல் வாங்கியிருக்கிறார். அவர் வருஞ் சமயங்களில் 'வாசிஷ்டம்' முதலிய வைராக்கிய நூல்களுக்குப் பொருள் கேட்டுக் கொள்வோம்.

வாணி:—என்னத்தைக் கேட்டு என்ன செய்ய? ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு ஆகுமா? எனது நெஞ்சம் நீறுகிறது. நாளைக்காரியம் எப்படி முடியப் போகிறது? நான் எவ்வாறு உயிர்தாங்கி யிருப்பேன்? அரச ராணையை நான் எவ்விதம் மறுப்பது?

மனோ:—நாளைக்கு உன் தந்தை அரச ரிடம் வந்து தெரிவிக்க வருவாரே! அவர் நோக்கத்தையும் உனது கருத்தையும் உன் காதலர்க்கு உரைத்தாயா?

வாணி:—"அது தான், அம்மா, என் மனத்தை அறுத்துக் கொண்டேயிருப்பது. அவர் மனமும் கேட்கவில்லை; வாழ்வும் கேட்கவில்லை. ஒரே யொரு வார்த்தைதான் கேட்டார். அதை இந்தப் பாவி சொல்லவில்லை. பைத்தியகாரி பேசாமல் இருந்து விட்டேன். இனி என்ன செய்யப் போகிறேன்! அவர் என்ன நினைத் தாரோ தெரியவில்லை. என் வீட்டுப் பக்கமும் வாராதபடி அவரை எனது அன்னை கொடுஞ் சொல்லால் வெருட்டினாள். ஊர்ப்பக்கமும் வராதபடி குடிலப் பிரபு ஓட்டிவிட்டார். இதை யெல்லாம் யாரிடத்தில் சொல்லுவேன்? யார்போய் என்காதல ரிடத்தில் என் உள்ளத்தை உணர்த்துவர்? என் உயிர்த்தோழி யாகிய நீதான் எனக்குத்துணை."

இது கூறும்பொழுது வாணிக்குக் கண்ணீர் ததும்பிற்று. அடக்கி யடக்கி முயன்றும் வருத்தம் மேலிட்டது. வாய் திறவாது அழத் தான் முடிந்தது. மனோன்மணி சகிக்க மாட்டாதவளாய் வருந்திப் பின் கருணை கடலாகிய இறைவனது திருவருளால் கருதியபடியே எல்லாம் முடியுமென்று வாணிக்குத் தேறுதல்கூறி ஆற்றிக் கொண் டிருந்தாள்.

அப்பொழுது செவிலியும் சில தோழிப் பெண்களும் வந்து சேர்ந்தனர். மனோன்மணி யருகில் செவிலி வந்து 'நீ உன் கையால் நட்டு வளர்த்த முல்லைச் செடி இன்று பூத்தது. உனக்கு மணம் அடுத்திருக்கவேண்டும்' என்று கூறினாள். மனோன்மணி அவளை நோக்கி 'நான் தவத்தையே நாடிக் கொண்டிருக்க என்மனம் வேறு இச்சைகளால் சோர்வு படுமா? நெருப்பையும் கறையான் அரிக்குமா? என்று கடிந் துரைத்தாள். தோழிகளுள் ஒருத்தி "முல்லைச்செடி நிரம்ப அரும்பி யிருப்பதை நீயே வந்துபார். இன்று இராத்திரி அத்தனையும் நன்றாக மலர்ந்து விடும்' என்று கூறினாள்.

மனோன்மணி வாணி முதலானவர்கள் முல்லைச் செடியை சென்று கண்டு அகமகிழ்ந் திருந்தார்கள்.

மாம்ச பக்ஷணம் செய்யும் தாவரங்கள்

வேங்கை, சிங்கம் முதலிய விலங்குகள் மாமிசத்தை நாடுவது போலத் தாவரங்களும் மாமிசத்தை நாடுகின்றன.

டன்ஸ்ற்றன் என்னும் துரை மகன் ஒரு நாள் மாலையில் நிக்கரா கூவா என்ற ஏரியண்டை உலாவிக் கொண்டிருந்தார். அவருடைய நாய் அவரைத் தொடர்ந்து சென்றது. முன்னே நடந்து சென்ற டன்ஸ்ற்றன் தன் பின் வந்த நாய் வேதனையால் ஊளை யிடுவதைக் கேட்டார். திரும்பிப் பார்க்கவே அது ஒரு செடியின் இடையில் சிக்கியிருப்பதைக் கண்டார். அச்செடி தன் தண்டுகளால் அந் நாயைக் கட்டி வரிந் திருந்தது. அதன் உடம்பிலிருந்து ரத்தமும் வடிந்துகொண் டிருந்தது. உடனே அவர் ஓடிச் சென்று நாயை விடுவித்தார். இம்மாதிரிச் செடிகள் வட அமெரிக்காவில் அதிகம்.

***

இதை விட ஆச்சரியமான செடிகள் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்தி ரேலியாவிலும் உண்டு. அச்செடிகளின் புஷ்பங்கள் மிக வாசனை யுடையவை. அவ்வாசனையால் அவை பிராணிகளை வலை வீசிப் பிடிக் கின்றன. மது வுண்ண விரும்பிப் பூச்சிகள் புஷ்பங்க ளண்டை செல்லும். தேன் புஷ்பத்தின் அடித் தட்டில் இருப்பதால் பூச்சிகள் பூவிற்குள் இறங்கும். உடனே புஷ்பத்தின் இரு மருங்கிலும் இருக்கும் இரண்டு கூரிய முட்கள் அப்பூச்சிகளின் உடலி னூடே உருவிச் செல்லும். அவ்வேழைப் பிராணிகள் பூக்களுக்கு இரையாகும்.

***

சுமத்திராத் தீவில் இங்கிலீஷ் லீலி போன்ற ஒரு செடி யுண்டு. அதன் தண்டு 6 அடி நீளம். இலை 12 அடி நீளம். ஒரு செடி சாதாரணமாக 60 அடிச் சுற்றளவில் படருமாம். இதிலிருந்து எழும்பும் வாயு விஷத் தன்மை யுடையது. காலையும் மாலையும் அதிலிருந்து விஷ வாயு எழும்புமாம். செடிகளின் பக்கத்தில் எந்தப் பிராணி சென்றாலும் மறு நாள் பிண மாகுமாம். அணலி மரத்தை யடுக்கும் ஊர் வனவும் பறவை பூச்சிகளும் அதற்கு இரையாவது போல இச்செடியின் பக்கம் செல்லும் பிராணிகளும் அதன் விஷ வாயுவை யுண்டு அதற்கு இரையாகு மாம்.

காய சித்தி.

(பி. ஸ்ரீ. ஆசார்யா, பத்திராதிபர் "கிராம பரிபாலனம்".)

சரீரமாகிய தெப்பத்தைக் கொண்டு சம்சாரமாகிய கடலைக் கடக்க வேண்டு மென்று வேதாந்தம் உபதேசிக்கின்றது. "அரக்கனைப் போல வலிமை யுடையவனா யிரு; ஆனால் அவ் வலிமையை அரக்கனைப் போல (கெட்ட வழிகளில்) உபயோகியாதே" என்று ஓர் ஆங்கில மகா கவி கூறுகின்றார். சூரனது வஜ்ர தேகமும் பக்தனது நன்னெஞ்சமும் ஒருங்கே பெற்றவன் சித்தனாவான். இராட்சத உடம்பு, குழந்தை யுள்ளம்—இது காயசித்தியின் லட்சியம். குக நம்பியை வர்ணிக்கையில் தமிழகத்தின் கவிச் சக்கரவர்த்தி

"கற் காணும் திண்மையான்
கரை காணாக் காதலான்"

என்று கூறுகின்றார். "கண்ண கன்தட மார்பெனும் கல்லினன்"; அத்தகைய திண்மை வாய்ந்த மார்புக் கூட்டில் குடி கொண்ட நெஞ்சமோ அன்பு மயமாய் ஒளிர்ந்தது.

'கற்காணும் திண்மை.'

கற்காணும் திண்மை யென்றால் எப்போதும் உடம்பின் தசைகள் கல்லைப் போல இறுகியிருக்கும் என்பதன்று. தசைகளை இறுகச் செய்தவுடன் அவை கல் அல்லது இரும்பு போல வன்மை யுடையன வாகின்றன. ஆனால் சும்மா இருக்கையில் அல்லது சுகமாக இளைப்பாறுகையில் தசைப் பற்றுக்க ளெல்லாம் வெண்ணெய் போல் மிருதுவாய் விடுகின்றன. இது சூரனது சரீர நிலை யென்று ஸாண்டோ முதலான மேனாட்டு வீர புருஷர் கூறுகின்றனர். உடம்பு இவ்வண்ணம் திண்மை நிறைந்து விளங்கும் கல் மலையாகவும், உள்ளம் கள்ளம் அற்றுக் கருணை நிறைந்து ததும்பும் இன்பக் கடலாகவும் இருக்க வேண்டு மென்பது சித்த புருஷர் கொள்கை.

வீரியமும் தேஜசும் அகமும் புறமும் ததும்பி வழியப் பெற்ற உத்தம வீரர்களது இதயம் என்றும் இளமையும் ஆக்கமும் வளரும் களமா யிலங்குகின்றது. 'அறம் கிடந்த சிந்தையராய் ஆசையெலாம் துறந்த அதி வீரர்'களான சித்த புருஷர்கள் பயம் கவலை யாதியவற்றைச் சாம்பரு மின்றிச் சுட்டெரித்தவர்களாதலின், ஆண்டிலும் அனுபவ அறிவிலும் முதிர்ந்தவர்களா யிருப்பினும் உள்ளத் தூய்மையிலும் உவகையிலும் என்றும் குழந்தைபோ லிருப்பர் இவர்கள் உடம்பை ஈசன் கோவிலாகவும் ஆன்மாவின் பரிணமத்திற்கு ஏற்ற ஆடையாகவும் கண்டறிந்து போற்றுகின்றனர். ஒளியும் வலிமையும் அழகும் நாளுக்கு நாள் அதிகரிக்கும்படி உடம்பையும் உள்ளத்தையும் தக்க சாதனங்களால் பேணுகின்றனர்.

உடல்—உள்ளம்—ஆன்மா.

ஆன்மா எஜமானன்; உள்ளமும் உடம்பும் கருவிகள். எஜமானன் கையில் கருவிகள் அடங்கி யுழைத்தாலொழிய, தொழில் செம்மை பெருது. உடம்பும் உள்ளமும் ஆன்மாவின் இச்சைகளுக்கு இணங்கி யொழுகினு லொழிய, வாழ்க்கை செம்மை பெருது. இசை வல்லான் ஒருவனுக்கு வசமாகும் நல் லிசைக் கருவி போல, சித்தனுக்கு உடம்பும் உள்ளமும் வசமாகின்றன. தேர்ந்த சிற்பியின் கைத் திறமை அவனது கருத்தின் அழகை இனிது விளக்குவது போல, சாதனங்களால் பக்குவ மடைந்து வரும் உடம்பும் உள்ளமும் சித்த புருஷனது ஆன்ம விளக்கமாய்த் திகழ்கின்றன.

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு." (ஒளவை குறள்.)

ஆன்ம ஒளியைப் பிரதி பலிக்கும் அணி மணிக் கண்ணடி யாய் உள்ளம் மாசற்ற தாக வேண்டும். அகமே புறமாகக் காணப் படுவதால், உடம்பும் தன் இறைவனுகிய ஆன்மாவைப் பிரதிபலிக்கும். இதனையே 'சரீரம் வேதித்தல்' என்றும் 'இரும்பான உடம்பு பொன்' னுவதென்றும் பெரியோர் கூறுவர்.

ஆன்ம சக்தியும் உள்ள நிலையும்.

மேல் நாட்டுச் சரீர யோகிகள் (Physical Culturists) கேவலம் ஜட மாயா வாதிக ளாவர். தகுந்த அப்பியாசத்தால் உடம்பைப் பூர்ண சுகத்தோடும் வலிமையோடும் பாது காப்பதில் விருப்பமும் நம்பிக்கையு முள்ளவர். சுகமான உடம்பில் சுகமான மனம் குடி கொள்ளும் என்னும் பழைய கிரேக்கர்களது கொள்கையே மேல் நாட்டாரின் குறிக் கோளாய் விளங்குகின்றது. இவர்களிற் சிலர் இப்பொழுது ஆரோக்கியத்தின் பொருட்டு இயற்கை வாழ்க்கைக்குத் திரும்புகின்றனர். நமது நாட்டுச் சரீர யோகிகளோ உண்மையான ஞான சித்தர்க ளாவர். இவர்களது சாதனங்களெல்லாம் ஆன்ம சக்தியால் உள்ளத்தையும் உடம்பையும் வசமாக்கி மலர்த்தி ஒளியுறச் செய்வனவாம். ஆன்ம சக்தியின் பல வேறு அம்சங்களையும் புதிய புதிய அழகுகளையும் சிருஷ்டிகளையும் அற்புதங்களையும் வெளியிடும் அன்பு மயமான மனமும், இத்தகைய மனத்திற் கேற்ப மலர்ந்து ஆன்ம விளக்கமாய் விரிந்து திகழும் வலிமை வாய்ந்த திவ்ய சரீரமும் உடையராய் இவ்வுலகில் நீண்ட காலம் அமர வாழ்க்கை வாழவேண்டு மென்பது காய சித்தர்களது இலக்காகும்.

ஆன்ம சக்தியால் உள்ளத்தை வசீகரிக்கச் செய்து, உடம்பை இங்ஙனம் வசீகரிக்கப் பெற்ற உள்ளத்தின் வசமாக்க முயல்வது உண்மையான காய சித்திக்கு உரிய உத்தம மார்க்க மாகும்.

சித்தன் பிறப்புரிமை.

தன் நம்பிக்கை, தன்னை யறிதல், தன் அடக்கம்—இம் மூன்றுமே மகா சக்திக்கு மார்க்கம் என்று ஆங்கில நாட்டுப் பாவலர் ஒருவர் பாடுகின்றார். ஆனால் மேல் நாட்டார்களில் பெரும்பாலார் மனமே ஆன்மா வென்று மயங்குகின்றனர். இன்னும் மூளையே மனத்திற்குக் காரணம் என்றும் பலர் வாதிக்கின்றனர். உடம்பின் ஸ்தூல சக்திகளது தொகுதியே ஆன்மாவென்று ஹெக்கல் பண்டிதர் கூறினர். 'புதிய உள்ள நூல்' (New Psychology) ஆராய்ச்சி யாளர்கள் ஹெக்கல் கொள்கையை மறுத்து உள்ளமே உடம்பிற்கு ஆதார மாவதென்றும், உமிழ் நீர்க் கோளங்களிலிருந்து உமிழ் நீர் சுரப்பது போல, உடம்பிலிருந்து அல்லது உத்தமாங்கமாகிய மூளையி லிருந்து ஆன்மாவாவது மனமாவது சுரப்பதில்லை யென்றும் மெய்ப்பித்து வருகின்றனர். மேலும் இந்திய ஞானம் பரவி வரும் இடங்களிலெல்லாம், உடம்பிற்கும் உள்ளத்திற்கும் ஆதாரமாய் இவ் இரு கருவிகளுக்கும் எஜமானனாயிருப்பது ஆன்மா என்னும் உண்மையும் பரவி வருகின்றது. ஆதலால் எதார்த்த மனிதன் தேகமல்ல; மனமு மல்ல; இவ் இரண்டிற்கும் தலைவனாகிய ஆன்மாவே—என்னும் தத்துவத்தை மேல் நாட்டினரில் ஒரு சாரார் உணர்ந்து வருகின்றனர்.

ஆன்மா ஒளி மயமானது; என்றும் இளமையோ டிருப்பது. ஒவ்வொரு ஜீவான்மாவும் எங்கும் நிறைந்த பரமாத்மாவின் எண்ணிறந்த அம்சங்களில் ஒன்றாகும். 'ஆன்ம வஸ்துவே நான்; எனது ஆதாரத் தலைவனே கடவுள்' என்று உணர்ந்து ஒழுகுவோன் சுத்த ஞானி. இத்தகைய நம்பிக்கை உண்மையில் தன் நம்பிக்கையாகும். இங்ஙனம் 'தன்னைக் காண்பதே தன்னை அறித'லாகும். உள்ளமும் உடம்பும் ஆன்மாவாகிய தனக்கு அடங்கி ஒழுகும் ஒழுக்கம் 'தன் அடக்கம்' எனப்படும். இம் முப்பொருளே ஆன்ம-சுய-ஆட்சியாகிய முழுச் செல்வ மாகும். ஆன்ம சுய ஆட்சியே சித்தனது பிறப்புரிமை.

நமது பொன்னுடை

ஆன்மாவின் அழகிய விசித்திரப் பொற் பட்டாடை யாக உடம்பைப் போற்ற வேண்டு மென்று சரீர யோகியர் கூறுகின்றனர். நமது 'பொன் ஆடை' யாகிய பொன் மேனியை அழகாகவும் திண்மையுள்ளதாகவும் சுத்தமானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

தேகத்திலே ஆன்மாவைக் காணவில்லை யென்று தேக தத்துவ சாஸ்திரி கூறுகின்றான். தேகமே ஆன்மா வென்று உலோகாயதன் மகிழ்கின்றான். உடம்பை ஓர் அற்புத யந்திரமாகக் காணும் பௌதிக சாஸ்திரி இவ் யந்திரத்தின் திறமையைப் பலவித ஸாதனங்களாலும் அபிவிருத்தி செய்ய முயல்கின்றான். யோகியோ

உடம்பைப் பரிணமித்து வளரும் ஆன்ம உடையாகவும், உலாவும் திருக்கோயிலாகவும் பாவிக்கின்ருன். உடம்பின் ஒவ்வோர் அணுவி லும் ஆன்ம சக்தி பரவி யொளிர்கின்றது. இவ் வுண்மையினை உணர்ந்து உள்ளத்தைச் சாதன வாயிலாக ஏவிப் பிராண சக்தியைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்து காய சித்தி செய்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவன் மெய்யான சரீர யோகி.

உள் மனமும் அநிச்சா நரம்புத் தசைகளும்
(Sub-conscious Mind and Involuntary Muscles)

புறமனம் அல்லது பகுத்தறியும் மனத்தையே மனமென மேல் நாட்டார் நீண்ட காலமாக நினைத்திருந்தனர். உள் மனத்தின் (Sub-Conscious Mind) அபார சக்திகளை இப்பொழுது தான் நவீன உலகம் ஆராய்ந்து அறிந்து வருகின்றது.

கண்களை இமைக்கின்ருேம். இது புற மனத்தின் காரிய மல்ல. கண்ணிமை போலத் தாமாகவே இயங்கும் தசைகளை 'அநிச்சா நரம்புத் தசைகள்' என்று உடல் நூலார் கூறுகின்றனர். இத் தகைய தசைகளை இயக்குவது உள் மனம். உள் மனத்தை ஏவித் தொழில் செய்யக் கற்றுக்கொண்டால், அநிச்சா நரம்புகளையும் தசை களையும் வசமாக்கி ஆளலாம்.

இத்தகைய சக்தி சித்தர்களுக்கும் யோகிகளுக்கு முண்டு. இதனை அப்பியாசத்தால் யாரும் அடையலாம்.

உள் மனத்தை வசமாக்கி, அநிச்சா நரம்புகளையும் தசைகளையும் இயக்கிப் பலவகையான 'ஆசனங்'களால் உடம்பைக் கட்டுப் படுத்த முயல்வோர் ஹடயோகிய ராவர்.

ஹடயோக அப்பியாசங்களிற் பல தற்காலத்தில் பெரும்பா லார்க்கும் பொருத்தமானவை யல்ல. ஆனுல் உள் மனத்தை வச மாக்கிக் காய சித்தி செய்வதற்குப் புதிய லகுவான முறைகள் தற்கால மானஸ சாஸ்திர ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப் பட் டிருக்கின்றன.

அநிச்சா நரம்புத் தசைகள் மீது ஆணை செலுத்த முடியா தென் பது பௌதிக ஞானியின் கொள்கை. ஆனுல் உடம்பின் அமைப்புக் களிலெல்லாம் தன் ஆணையைச் செலுத்தி எண்ணிய பலன்களை எளி தில் பெறலா மென்பது சூட்சும ஞானியின் அனுபவ உண்மை.

காய சித்தியின் அதி அற்ப பாகத்தை மேனுட்டார் சிலர் இப் பொழுது கண்டு பிடித்துச் சரீர நிர்மாணத்திற்கு (Body Building) இன்றியமையாத சாதன முறைகளாகப் போதித்து வருகின்றனர்.

ஹாஸ்யத் துணுக்குகள்

தந்தையும் தனயனும்

தந்தை.—அடா குழந்தாய்! ஸ்திரீகளைக் கண்டால் தாயைப் போல் எண்ணி நடந்துகொள்.

பையன்.—அவர்களெல்லாம் எனக்கு அம்மா முறையானல் தங்களுக்கு எத்தகைய பாந்தவ்ய முண்டாகும்?

த.—சீ! அவ்விதம் கேளாதே! பிறர் பொருளை மண்ணைப்போல் நினை.

பை.—அந்த மண்ணை உள்ளே வைப்பானேன்? நான் அதைத் தெருவில் கொட்டுகிறேன்.

த.—புத்தியற்றவனே! சொன்ன நீதிகளைக் கவனித்துக்கொள். தன்னுயிரைப்போல் பிறர் ஜீவனையும் எண்ணுவாயாக.

பை.—பிறரை நாமாய் நினைக்கையில் அவர்களின் சொத்துக்களும் நம்முடையதே யல்லவா?

த.—சீ! சீ! இனி உனக்கு ஒன்றும் சொல்லமுடியாது. எழுந்துசெல்.

பை.—இதுவரையில் கற்றுக்கொண்டதை மறவாமல் செய்கிறேன்.

இவ்விதங் கூறிப் பையன் தெருவி லோடினான். அங்கிருந்த ஓர் ஸ்திரீயைக் கண்டு "அம்மா" என் றழைத்தான். நல்ல பிள்ளையடா! என்னை மரியாதையுடன் அழைத்தாயே என்று ஸந்தோஷமுற்றாள் அந்தமாது.

மிட்டாய் வாங்கிக்கொள்கிறேன் பணம் கொடு என்று சொன்னான் சிறுவன்.

நான் ஏழை. பண மில்லாதவள் என்று கூறினாள் ஸ்திரீ.

முகத்தைப்பார்! துஷ்ட ஸ்திரீயே! தரித்திரம் பிடித்தவளே! என்று பையன் பகர்ந்தான்.

அடா, நாசகாலா! உனக்கு வந்த கேடென்ன? என்று வைதாள் ஸ்திரீ.

மானிடப் பிறவியின் மாட்சி

(பண்டிதர் எஸ். முத்துசுவாமி பிள்ளை எழுதியது.)

உலகம் பெரிது. அதிலுள்ள பொருள்களோ பலவகைப் பட்டன; அன்றியும் எண்ணிறந்தன. ஈ எறும்பு கடை எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகள் உள்ளனவாக நம்முன்னோர் கூறிப் போந்தார். அஃது கேவலம் புனைமொழி யென்று தள்ளிவிடுவதும் சாத்திய மல்ல. அறிவு முதிர முதிர, அறியப்படாத ஜீவராசிகள் இன்னும் அநந்தம் உள்ளனவாக வெளியாகின்றது. இவ்வண்ணம் அளவிறந் தனவாகிய பிராணிகளை ஈசன் ஏன் படைத்தான்? "படைக்கின்ற தீசன் திருவிளையாட்டே" யாகினும் அவ்விளையாட்டுக்கும் ஏதேனும் ஒரு நோக்க மிருத்தல் வேண்டும்; இன்றேல் ஞான ஸ்வரூபியாகிய ஈசனும் ஞான சூனிய ராவர். ஐயோ! அஃது எண்ணத்தக்கது மன்று; சொல்லத் தக்கது மன்று. அங்ஙனம் கூறிய நாவும் சுடும்; எண்ணிய இதயமும் எரியும். பின்னர் படைப்பின் பயன் யாதோ என ஆராயுமிடத்து

"ஒவ்வோர் பொருளினும் ஒவ்வோர் நலத்தை உதிக்கவிட்டுச்
செவ்வே உலகம் செழிக்கச் செய்தான் பெரும் சித்துடையான்"

"எல்லா உயிரும் சுகம்பெறல் ஈசன் என்னும் முடிவாய்ப்
பல்லாயிரம் வழி அச்சுகம் எய்தப் பயிற்றுகின்றான்"

என்னும் ஆப்த வாக்கியங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன.

அதாவது இவ் வுலகத்துள்ள ஒவ்வொரு உயிரும் அதற் கியன்ற மட்டும் சுகம்பெற வேண்டுமென்பது தேவ கட்டளை. அக்கட்டளை முற்று பெறும் பொருட்டே எல்லா உயிர்களும் படைக்கப்பட் டிருக்கின்றன. ஆகவே நமது கட்புலனுக்கு எட்டாத சிறு புழுவுங் கூட, சுகம் பெறவும் தன்னு லியன்றமட்டும் பிற வுயிருக்குச் சுகம் விளைக்கவும் படைக்கப்பட் டிருப்பதாய்ப் பிரத்தியட்ச மாகின்றது.

அற்பமான சிறு புழுவும் இவ்வண்ணம் ஒரு மகத்தான உத்தே சத்தோடு சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறதாயின், பஞ்ச பூதங்களையும், அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், யோனிஜம் ஆகிய நால்வகைத் தோற்றங்களையும் அடக்கியாளும் வலிமையும் ஸர்வ வியாபகனாய் ஸர்வசக்தனாய் ஸர்வ ஞானியாய், சச்சிதாநந்தனாய் விளங்கும் பரம் பொருளின் திருவருட் பிரசாதம் பெறும் மகிமையும் உடைய மஹோந்நதமான மானிடப் பிறவியின் மாட்சியை என்னென்று இயம்புவது?

உண்மையாகவே நாம் இப்பொழுது பெற்றிருக்கும் மானிட ஜென்மம் மிகவும் மேலானது; மிகவும் மஹத்தானது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் தரத் தக்கது.

மானிடப் பிறவியின் மாட்சி

இவ்வுண்மையை உயத்துணராது "ஐயோ நான் ஏழை; நான் துர்ப்பலன்; நான் வறியன்" என யாராவது பல்லைக்காட்டிப் பஞ்சப் பாட்டுப் பாடுவார்களானால் அவர்களைப்போல் முழு மூடர்கள் உலகத்தில் இல்லை. அவர்கள் பாடெல்லாம் கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுத புத்திசாலியின் கதையாகவே முடியும்.

ஆனால் மானிடப் பிறவியின் மகிமையை அறிபவர் மிகச் சொறபம். ஒருகால் அறியினும் அம்மகிமையை அநுபவிக்கத் துணிவு கொள்வோர் தொகை அதிலும் சொற்பம். துணிவு கொள்ளினும் இறுதி வரையிலும் விடா துழைத்துக் கைவல்லியப் படுத்துவோர் தொகை அதனினும் மிகச் சொற்பம்.

ஸர்வ வியாபகரான கடவுளுக்கு நாம் ஒரு சிறு துரும்பினுங் கடையரே யாயினும் நாமும் இப்பிரபஞ்சத்தின் ஒரு சின்னஞ்சிறு பகுதியென்றும் அதன் வெற்றிக்காக உழைக்க நாமும் கடமைப்பட்டிருக்கின்றோ மென்றும் உணரல்வேண்டும். அவ்வுணர்ச்சி யின்றி உண்பதும் உறங்குவதும் மட்டுமே மானிடப் பிறவியின் நோக்கமென்றெண்ணி காலந்தள்ளுவோர் மனித வேஷதாரிகளே யன்றி உண்மையில் மனிதர்க ளல்ல.

ஈ, எறும்பு, நாய், குரங்கு முதலிய அற்பச் சீவராசிகளும் உண்ணுகின்றன, உறங்குகின்றன. நாமும் அவைபோல் நாட்கழிப்பின் நமக்கும் அவைக்கும் பேதமென்ன? நாம் எங்கிலைமையி லிருப்பினும் ஒரு உயர்வான உத்தம நோக்கத்தோடு உழைத்தல் வேண்டும். அதனால் நமக்கு அநேக இடையூறுகள் உண்டாகக் கூடும். பற்பல பிராணாபத்துகள் வரக்கூடும். அதனால் என்னை? அவைகளுக் கஞ்சிப் பின்னடைவோர் ஆண்மக்க ளாகார். வருந்திப் பெறும் பேறே மேலான பேறு. பெறுதற் கெளியன பெறுதற் குரியன வல்ல. பெறுதற் கரியனவே பெறத் தக்கனவாம். அரியனவாகத் தோற்றுவனவும் எந்நாளும் அரியன வல்ல. உண்மையில் நம் நினைவுக் கெட்டுவன யாவும் பெறத்தக்கனவே. உண்மையான உழைப்பும் உறுதியான நெஞ்சமு முடையார்க்கு அரியனவு முளவோ? தவமகனான மார்க்கண்டேயன் சிரஞ்சீவி யாகவில்லையா? பகீரதனும் ஆகாச கங்கையைப் பெறவில்லையா? ஓகோ! அவை பழங்கதையெனத் தள்ளுவீராயின், ஒரு சிறு குடிசையிற் பிறந்து, உலகிற் பாதியை ஒரு குடைக் கீழாக்கிய நெப்போலியன் சரிதைக்கு என்ன சொல்லுவீர்? காற்றினையும் கனலினையும் புனலினையும் அடக்கியாளும் வலிமைகொண்ட ஐரோப்பிய பண்டிதர்களின் மெய்ச்சரிதைக்கு என்ன சொல்லுவீர்?

ஆகவே உண்மையில் அரியன ஒன்றுமே இல்லை. "எல்லா உயிரும் சுகம்பெறல் ஈசன் முடிவா'தலால், நம்மால் உலகத்துக்குக் கூடும் பெருஞ்சுக மெதுவோ அதற்கான நிமித்தங்களை ஆராய்ந்தறிந்து அவைகளைக் கைவல்லியப் படுத்த முயல்வோ மாக!

உலகப் போக்கு

உலகத்தில் 860 முக்கிய பாஷைகளும், 5000 கிளைப்பாஷைகளும் பேசப் பட்டு வருகின்றன. அவற்றுள் ஐரோப்பாவில் 89-ம், ஆபிரிக்காவில் 114-ம், ஆசியாவில் 123-ம், அமெரிக்காவில் 427-ம், ஆஸ்திரேலியாவில் 117 பாஷைகளும் பேசப்பட்டு வருகின்றன.

***

மனிதரின் இருதயங்களைக் கண்ணினால் பரிசோதனை செய்யக் கூடிய ஒரு பூதக் கண்ணாடியை ஒரு டாக்டர் கண்டு பிடித்திருக்கிறாராம்.

***

தென் ஆபிரிக்காவில் ஒரு மனிதனுக்கு நெற்றியில் ஒரு அடி நீளம் ஒரு கொம்பு முளைத் திருக்கிறதாம். அக்கொம்பு ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை விழுந்து முளைக்கிறதாம்.

***

பூலோகத்திலுள்ள தங்க நாணயங்களில் நூற்றுக்கு நாற்பத்தைந்து பங்கு—அதாவது சுமார் பாதி அமெரிக்கா ஐக்கிய நாட்டில் இருக்கிறது.

***

போர்டு என்ற அமெரிக்கா கோடீசுரரின் மோட்டார் வண்டித் சாலைகளில் தினந்தோறும் பதினாயிரம் மோட்டார் வண்டிகள் செய்யப்படுகின்றன.

***

லண்டனில் 1921ம் வருஷத்தில் ஏற்பட்ட 5281 தீ விபத்துகளில் பாதி அஜாக்ரதையால் ஏற்பட்டன. தீ விபத்தால் வருஷந்தோறும் ஒரு கோடியே இருபதுலட்சம் பவுன் நஷ்டம் ஏற்படுகிறது.

***

ஸன்லைட் சோப் கம்பெனியின் சொந்தக்காரரான லார்டு லெவர் ஹூம் பிரபு சென்ற இருபது வருஷங்களில் இரண்டு கோடியே எழுபது லட்சம் பவுண் விளம்பரங்களில் செலவிட்டிருக்கிறார்.

***

மிஸ்டர் ஸ்மித் என்ற பண்டிதர் கண்டுபிடித்திருக்கும் ஒரு கருவியால் ஓர் அங்குலத்தில் கோடியில் ஒரு பங்கையும் அளந்து விடலாமாம்.